பந்து 04 பக்கங்கள் 32 யூன், 2013

# KEDHAYAM வெற்றிக் கேடயம்

கேடயம் ஜெயிக்கும் வரை விளையாடு மாத இதழ்




ரூ. 60

'சிவகுருநாதன் கிண்ணம்' யாழ்.இந்து வசம்



## தலைவர் வந்ததால் தலைவிதி மாறுமா ?



'ஐ.பி.எல்.' கிண்ண கனவு நனவானது



அடுத்த மரடோனாவா நெய்மர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிருபா லேணர்ஸ்
## KIRUBA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப்பயிற்சி பாடசாலை

பெண்களுக்கு நவீன காரில் பயிற்சிகள் வழங்கப்படும்

மூன்று மொழிகளிலும் வாகனப் பயிற்சி அளிக்கப்படும்

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- வான், முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் (டெக்டர்) அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக்கட்டணம்.
- எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை.



தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே : 0212224353, 0214923200.

| சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | விசுவமடு | பருத்தித்துறை |
|---|---|---|---|---|---|
| 0212242022 | 0214923202 | 0213006550 | 0212285505 | 0213201515 | 0214923201 |
| 0714546956 | 0213201818 | 0714546957 | 0714546955 | 0714546955 | 0714546958 |

WEDDING CAR FOR HIRE



CONTACT : 0775026827

# கணிதம்
பிரத்தியேக வகுப்பு

தரம் 6 முதல் 11 வரை (குழு மற்றும் தனி)

தொடர்புகளுக்கு : 0778257641



All Printing Solutions Under One Roof

JEYASRI Printers

50,College Road,
Neeraviyadi,
Jaffna.

T:+94 (0) 21221 9129
M:+94 (0) 77583 4835
+94 (0) 77654 1501
E:jeyasriprinters82@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடும் மாணவர்களே படிக்கக்கூடியவர்கள்



நேர்கண்டவர் :
க.வரோதயன்



திரு.சண்.தயாளன்

**யாழ். மாவட்டத்தின் சம கால விளையாட்டுப் பெறுபேறுகள் மற்றும் பாடசாலை மட்டங்களிலான விளையாட்டு நிகழ்வுகள் பற்றி யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப் பாளர் திரு.சண்.தயாளன் கேடயம் மாத இதழுக்கு வழங்கிய விசேட செவ்வி.**

**கேள்வி :** சகல பாடசாலை மாணவர்களும் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்க வேண்டும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. இது பற்றிய உங்கள் கருத்து என்ன?

**பதில் :** இலங்கையில் நீரிழிவு 60ஆகக் காணப்படுவதால் கல்வியமைச்சு மூலம் அதை நிவர்த்தி செய்வதற்கு விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. மாணவர்கள் விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபடும் போது நீரிழிவு மற்றும் தொற்றாத நோய்களைக் குறைக்கலாம். இதனால் தரம் 6 இல் மாணவர்கள் அனைவரும் குறைந்தது ஒரு விளையாட்டு நிகழ்விலாவது ஈடுபட வேண் டும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

**கேள்வி :** விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட முன்னர் வீரர்கள் உடற்தகுதி பரிசோதனை செய்து கொள்வது, யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை எவ் வளவு சாத்தியப்படும்?

**பதில் :** 50 வருடங்களுக்கு முன்பே பாடசாலைகளில் மாணவர்கள் உடற் தகுதி பரிசோதனைகள் செய்யவேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. போர்க்காலச் சூழலால் இது நடைமுறைக்குச் சாத்தியமில்லாமல் போயிற்று. தரம் 6,8,10 ஆகியவற்றில் மாணவர்கள் உடற்தகுதி பரிசோதனைகள் செய்துகொள்ள வேண்டும். நோய்கள் இனங்காணப் படுமிடத்து போதனா வைத்தியசாலைகளில் சிகிச்சைகள் அளிக்கப்படும். இதனை ஒவ்வொரு தரங்களிலும் செய்துகொள்ளும் போது விளையாட் டுக்களில் ஏற்படும் உயிரிழப்புக்களை தவிர்க்க முடியும்.

**கேள்வி :** படிப்பை ஒரு காரணமாக்கி மாணவர்கள் விளையாட்டு நிகழ் வுகளில் ஈடுபடுவதில்லை. பெற்றோரும் அவ்வாறான மனநிலையிலேயே இருக்கிறார்கள். இதுகுறித்த உங்கள் கருத்து என்ன?

**பதில் :** படிக்கக் கூடிய மாணவர்கள் தான் விளையாடக் கூடியவர்கள். இந்த உண்மையை இன்னமும் ஆசிரியர்களும், மாணவர்களும் உணர்ந்துகொள்ளவில்லை. இதற்கு காரணம், படித்த மட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் தாங்கள் உழைக்க வேண்டும் என்பதற்காக ரியூசன் வைப் பதால் மாணவர்களை விளையாட்டுக்களில் ஈடுபட அனுமதிப்பதில்லை. உயர்தரப்பரீட்சையில் சித்தியடையத்தவறியவர்களில் அநேகர் எந்தவித விளையாட்டுக்களிலும் ஈடுபட்டிருக்கவில்லை என்பது அண்மைக்காலங் களில் கண்டறியப்பட்டுள்ளது. படிக்கக் கூடிய மாணவர்கள் தான் விளையாடுவார்கள் என்பது நிரூபிக்கப்பட்ட விடயம்.

**கேள்வி :** 'குருவில்லா வித்தை பாழ்' என்பார்கள். குடாநாட்டில் பல பாடசாலை அணிகள் பயிற்றுவிப்பாளர்கள் இல்லாமல் இயங்குகின்றதே! ஏன் இவ்வாறான நிலைமை?

**பதில் :** குருவிற்கு கொடுக்கக்கூடிய தட்சிணை தொடர்பில் இங்கே பிரச் சினை நிலவுகின்றது. தென்பகுதி பாடசாலைப் பயிற்றுவிப்பாளர்கள் 20ஆயிரத்துக்கு மேல் பெறும்போது இங்கே இரண்டாயிரம் வரையில் தான் பாடசாலைகளால் கொடுக்க முடிகின்றது. பயிற்றுவிப்பாளர்கள் இல் லாமல் அணிகள் சாதித்தாலும், அவர்களால் தொடர்ந்து பிரகாசிக்க முடிவதில்லை.

**கேள்வி :** தேசிய அணிகளில் வடகிழக்கு வீரர்களை சேர்த்துக்கொள் ளாததற்கு இனப்புறக்கணிப்பே காரணம் என்ற பொதுவான ஒரு கருத்துண்டு. அதற்கு இது மட்டுமா காரணம்?

**பதில் :** இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. 80 காலப்பகுதிகளில் திறமையான வீரர்கள் வடக்கில் இருந்தும் இனத்துவேசம் காரணமாக ஒதுக்கப்பட்டார்கள். முன்பெல்லாம் மாணவர்களின் ஆவணங்களில் ஏதாவது பிழைகள் இருப்பதாக கூறி தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதை நிறுத்திவிடுவார்கள். ஆனால், இப்பொழுது போட்டிகளில் போது ஆவணங்கள் சமர்ப்பிப்பதில்லை. வயதை உறுதிப்படுத்தினால் போதும். ஆனால், இன்றும் முன்பு போல் இறுதிநேரத்தில் மாணவர்கள் கழற்றிவிடப்படுகிறார்கள். இதற்கு இனத்துவேசம் காரணமல்ல. தங்களைத் தோற்கடிக்க முடியாது என்ற நினைப்பு. என்றாலும் எங்கள் திறமைகளும், விளையாட்டு நுட்பங்களும் தென்பகுதி வீரர்களுடன் ஒப்பிடும் போது குறைவு தான்.

**கேள்வி :** தேசிய கிரிக்கெட் அணியின் பயிற்சிகளுக்காக யாழ். மாணவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களே?

**பதில் :** இங்கு பல திறமையானவர்கள் இருக்கின்றார்கள். சி.எஸ். என். தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய பயிற்சிமுகாமிலிருந்தே வடகிழக்கு வீரர்கள் மூவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப் பாணத்தில் 25 இற்கு மேற்பட்ட கிரிக்கெட் கழகங்கள் காணப்படுகின் றன. இவை ஒவ்வொன்றிலும் சிறந்த வீரர்கள் பரவியிருக்கின்றார் கள். இவர்களை ஒன்றிணைத்து நான்கு அணிகளாக்கி தேசிய போட் டிகளில் கலந்து கொள்ளும் போது எங்களில் இருந்தும் தேசிய அணிக்கு வீரர்கள் உள்வாங்கப்படலாம்.

**கேள்வி :** பாடசாலை மட்டங்களில் கால்பந்தாட்டம் தற்போது பெயரளவுக்குத்தான் விளையாடப்படுகின்றது. முன்னாள் தேசிய கால்பந்தாட்ட வீரர் என்ற வகையில் இதற்குக்க காரணமாக எதைக் கூறுவீர்கள்?

**பதில் :** டுவென்டி 20 கிரிக்கெட்டின் வருகையின் பின்னர், கால்பந்து விளையாடும் வீரர்கள் கூட கிரிக்கெட்டிலேயே ஆர்வம் காட்டுகின் றன. ஒரு மணிநேரம் களைத்து விளையாடுவதை மாணவர்கள் விரும்புகிறார்கள் இல்லை. ஆனாலும், மானிப்பாய் இந்துக் கல்லூரி தேசிய மட்டத்தில் சாதனை படைக்கின்றது. அவ்வணி வீரர்கள் தேசிய அணிக்குள் செல்லுமளவு தொடர்ச்சியாக விளையாட்டுக் களில் ஈடுபடுவதற்கு இங்கிருக்கும் கழகங்கள் களம் அமைத்துக் கொடுப்பதில்லை.


**பதில் :** கேடயம் விளையாட்டுச் சஞ்சிகை பற்றி?

கேடயம் சஞ்சிகையைப் போல நாங்கள் படிக்கும் காலத்திலும் சஞ் சிகைகள் வெளிவந்தன. எல்லாமே நின்றுவிட்டன. விற்பனையில் காணப்படும் குறைபாடுகள் தான் காரணம். ஆனால், தற்போதைய நிலைமையில் கல்வியமைச்சும், பாடசாலைகளும் விளையாட்டை ஊக்குவிக்கின்றன. மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வாருங்கள். மாணவர்களிடமிருந்து சிறந்த எழுத்தாளர்களை உருவாக்குங்கள். கேடயம் பயணம் தொடர்ந்து செல்லும். வாழ்த்துக் கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியன்ஸ் கிண்ணம் 2013

## இங்கிலாந்தில் பலப்பரீட்சை



**கனகலிங்கம்**
**கோபிகிருஷ்ணா**

2011ம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டிகள், 2012ம் ஆண்டு உலக டுவெண்டி 20 போட்டிகள் என எங்களுக்கு விருந்தாக சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தொடர்கள் அமைய, 2013ம் ஆண்டுக்கான விருந்தாக சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் எங்களை வந்தடையப் போகின்றன.

ஆரம்பத்தில் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் 'நொக் அவுட்' சுற்றுத் தொடராக ஆரம்பிக்கப்பட்ட இத்தொடர், 1998ம், 2000ம் ஆண்டுகளில் அப்பெயரிலேயே இடம்பெற்றதோடு, 2002ம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணமெனப் பெயரிடப்பட்டது. அத்தோடு 2009ம் ஆண்டிலிருந்து ஒருநாள் சர்வதேசப் போட்டித் தரவரிசைப் பட்டியலில் முதல் 8 இடங்களைப் பெறும் அணிகள் முட்டி மோதும் தொடராக அமைந்து வருகிறது.

உலகக்கிண்ணப் போட்டிகளில் 10 ஒருநாள் சர்வதேசப் போட்டி அணிகளும், சில உப அங்கத்துவ நாடுகளுமாகப் பங்குபற்றும் நிலையில், சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகள் பலமான அணிகளுக்கிடையிலான தொடராக வர்ணிக்கப்பட்டு வந்தது. 2002ம் ஆண்டிலிருந்து றௌண்ட் றொபின் (Round robin) சுற்று முறையில், குழுக்களாக அணிகள் பிரிக்கப்பட்டு, அவற்றிற்கிடையில் போட்டிகள் இடம்பெற்று, அரையிறுதிப் போட்டிகள், இறுதிப் போட்டி என வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்பட்டு வருகிறார்.

இத்தொடரின் நடப்பு சம்பியன்களாகவும், 2 முறை சம்பியன் கிண்ணத்தை வென்ற ஒரே அணியாகவும் அவுஸ்ரேலிய அணி காணப்படுகிறது. அத்தோடு, தென்னாபிரிக்க, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் இத்தொடரை இதுவரை வென்றுள்ள அணிகளாகவும், இலங்கை, இந்திய அணிகள் இத்தொடரின் வெற்றியைப் பகிர்ந்து கொண்ட அணிகளாகவும் உள்ளன. (2002ம் ஆண்டின் இறுதிப் போட்டி மழை காரணமாகப் பாதிக்கப்பட இலங்கை, இந்திய அணிகள் இணை சம்பியன்களாகியிருந்தன)

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் அதிக ஓட்டங்களைப் பெற்றவராக கிறிஸ் கெயில் காணப்படுவதோடு, மூன்றாவது இடத்தில் காணப்படும் ஜக்ஸ் கலிஸ் இம்முறை இத்தொடரில் பங்குபற்றாத நிலையில், கிறிஸ் கெயிலுக்குப் போட்டியாக புதிய வீரரொருவர் உருவாகுவாரா? பந்துவீச்சாளர்களின் முத்தையா முரளிதரனின் அதிக விக்கெட்டுக்களுக்கு யார் சவாலை வழங்கப் போவது? கிறிஸ் கெயில் சம்பியன்ஸ் கிண்ணத்தில் பந்துவீச்சிலும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளார்.


இவ்வாண்டுக்கான சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளோடு சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கு முடிவு கட்டப்படவுள்ள நிலையில், இறுதியாக இடம்பெறவுள்ள சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளில் எந்த அணி வெற்றிபெறும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகின்றது. இம்முறை பங்குபற்றும் 8 அணிகளில் அவுஸ்ரேலிய, இலங்கை, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகள் குழு 'ஏ' இல் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்திய, தென்னாபிரிக்க, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் குழு 'பி' இல் வகைப்படுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு குழுவிலுள்ள ஏனைய 3 அணிகளுடனும் ஒவ்வொரு அணியும் போட்டியில் பங்குபற்றவுள்ளது. இதன்படி, குழுநிலைப் போட்டிகளில் ஒவ்வொரு குழுவிலும் முதலிரு இடங்களைப் பெறும் இரு அணிகளும் அரையிறுதிப்போட்டிக்குத் தகுதிபெறவுள்ளன. குழுக்களின் அடிப்படையில் குழு 'ஏ' சற்றுப் பலமான, போட்டி அதிகம் வாய்ந்த குழுவாக அமைந்துள்ளது. அந்தக் குழுவிற்கும் இலங்கை அடங்கியிருப்பது இலங்கைக்கு அதிக அழுத்தங்களை வழங்கும். குறிப்பாக நடப்பு சம்பியன்கள் அவுஸ்ரேலிய அணியும், போட்டிகளை நடாத்தும் இங்கிலாந்து அணியும் இலங்கைக்கு நிச்சயமான போட்டியை வழங்கும். ஆகவே இலங்கை அணி அரையிறுதிக்கான வாய்ப்புக்களைக் குறைவாகக் கொண்டே களமிறங்குகிறது.

இத்தொடரில் பங்குபெறும் நடப்புச் சம்பியன்களான அவுஸ்ரேலிய அணி தெளிவற்ற ஒரு நிலையிலேயே களமிறங்குகிறது. இறுதியாக அவ்வணி இங்கிலாந்தில் வைத்து ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் மோசமான தோல்விகளைச் சந்தித்த நிலையில் அவ்வணி களமிறங்குகிறது. அவ்வணியின் பந்துவீச்சு சிறப்பானதாகக் காணப்படுகின்ற போதிலும், துடுப்பாட்டம் தொடர்பான சந்தேகங்கள் காணப்படுகின்றன. ஷேன் வொற்சன் முக்கியமான வீரராகக் காணப்படுகிறார்.

சொந்த மண்ணில் போட்டிகளில் பங்குபற்றும் இங்கிலாந்து அணி பலமான அணியாக உள்ள போதிலும், கெவின் பீற்றர்சனின் இழப்பு அவ்வணிக்கு மாபெரும் இழப்பாக அமைந்துள்ளது. கெவின் பீற்றர்சனின் இழப்பு ஒய்ன் மோர்கன் மீது அதிக அழுத்தங்களை வழங்கியுள்ளது. அண்மைக்காலமாக ஒய்ன் மோர்கனின் ஃபோர்ம் சிறப்பான நிலையில் இல்லாத நிலையில், அவுஸ்ரேலியாவைப் போன்று இங்கிலாந்தும் பந்துவீச்சில் பெருமளவில் தங்கியுள்ளது.

இலங்கை அணி இத்தொடரில் எதிர்பார்ப்புகளின்றியே களமிறங்குகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐ.பி.எல் தொடரில் இலங்கையின் வீரர்கள் சிறப்பான பெறுபேறு-களை வெளிப்படுத்தியிருக்காத நிலையில், இவ்வீரர்களின் ஃபோர்ம் தொடர்பான கேள்வி எழுகிறது. ஆனால் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தொடர்களில் எப்போதுமே ஓரளவு திறமை வெளிப்படுத்தும் இலங்கை அணி, இத்தொடரிலும் சிறப்பான பெறுபேறு-களை வெளிப்படுத்தினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. திஸர பெரேரா முக்கிய வீரராக உள்ளார்.

இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் சூதாட்டக் குற்றச்சாட்டுக்கள், கிரிக்கெட் சபையின் குழப்பங்கள் ஆகியவற்றிற்கிடையில் இத் தொடரில் பங்குபற்றும் இந்திய அணி, தனது முழுமையான திறனை வெளிப்படுத்துமா என்ற சந்தேகம் காணப்படுகிறது. அவ் வணி வெளிநாட்டு மண்ணில் அண்மைக்காலத்தில் தடுமாறும் பண்பும் அவ்வணி மீது அதிக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தவில் லை. புவனேஷ்வர் குமாரின் ஸ்விங் பந்துவீச்சு அவ்வணி சார்பில் அதிக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் அணி வழக்கத்தைப் போல பந்துவீச்சில் தனது கவனத்தைச் செலுத்திக் களமிறங்குகிறது. மிகச்சிறப்பான பந் துவீச்சு வரிசை, அதற்கேற்றவாறு தேவையான நேரத்தில் அணியைக் காப்பாற்றக்கூடிய அணித்தலைவர் என அவ்வணி களமிறங்குகிறது. அவ்வணியின் துடுப்பாட்டம் அவ்வணி மீது அதிக சந்தேகங்களை ஏற்படுத்தினாலும், நிச்சயமாக எதிரணிக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய பந்துவீச்சைக் கொண்டு போட் டிகளை வெற்றிகொள்ள அவ்வணி விரும்பும். உயர்ந்த பந்துவீச் சாளர் மொஹமட் இர்பான் எவ்வாறு பந்துவீசுவார் என்பது எதிர்பார் ப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

என்னதான் மிகப்பலமான அணிகளுள் ஒன்றாகக் காணப்பட் டாலும், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முக்கியமான தொடர்களில் சறுக்குவதை வாடிக்கையாகக் கொண்ட தென்னாபிரிக்க அணி இம்முறையாவது அதிலிருந்து வெளியே வந்து, வெற்றியைப் பெற் றுக் கொள்ளுமா? இலங்கையின் இடம்பெற்ற உலக டுவெண்டி டுவெண்டி தொடரில் தனது அணி அழுத்தத்தை எதிர்கொள்ள முடியாது மடிந்ததாக அணித்தலைவர் ஏ.பி.டி.வில்லியர்ஸ் ஏற்றுக் கொண்டிருந்த நிலையில், அதிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு சிறப்பாக ஆடுமா? ஹசிம் அம்லா வழங்கும் ஆரம்பங் கள் அவ்வணிக்கு முக்கியமானதாக அமையும்.

| வீரர் | போட்டிகள் | ஓட்டங்கள் | அ.கூ.ஓ. |
|---|---|---|---|
| கிறிஸ் கெயில் | 14 | 695 | 133* |
| சௌரவ் கங்குலி | 13 | 665 | 141* |
| ஜக்ஸ் கலிஸ் | 17 | 653 | 113* |
| ராகுல் ட்ராவிட் | 19 | 627 | 76 |
| ரிக்கி பொன்டிங் | 18 | 593 | 111* |
| ஷிவ்நரின் சந்தர்போல் | 16 | 587 | 74 |
| மஹேல ஜெயவர்தன | 18 | 574 | 77 |
| சனத் ஜெயசூரியா | 20 | 536 | 102* |
| டேமியன் மார்ட்டின் | 12 | 492 | 78 |
| மொஹமட் யூசுப் | 13 | 484 | 87 |

| வீரர் | போட்டிகள் | விக்கெட் | அ.கூ.வி. |
|---|---|---|---|
| முத்தையா முரளிதரன் | 17 | 24 | 4/15 |
| பிரட் லீ | 16 | 22 | 3/38 |
| கைல் மில்ஸ் | 12 | 22 | 4/38 |
| கிளைன் மக்ராத் | 12 | 20 | 5/37 |
| ஜக்ஸ் கலிஸ் | 17 | 17 | 5/30 |
| மேர்வின் டிலான் | 7 | 19 | 5/29 |
| சமிந்த வாஸ் | 16 | 18 | 2/6 |
| ஷேன் பொன்ட் | 10 | 17 | 4/21 |
| கிறிஸ் கெயில் | 14 | 17 | 3/3 |

உலக டுவெண்டி 20 தொடரை வெற்றிகொண்ட பின்னர் மேற் கிந்தியத் தீவுகள் அணி கலந்துகொள்ளும் முதலாவது சர் வதேசக் கிரிக்கெட் சபையின் தொடர். ஆனால் டரென் சமி என்ற உற்சாகமிக்க தலைவருக்குப் பதிலாக டுவைன் பிராவோ வை அணித்தலைவராகக் கொண்டு அவ்வணி களமிறங் குகிறது. தொடர்ச்சியாக ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சறுக்கி வரும் அணி, இம்முறை ஏதாவது சாதித்துக் காட்டுமா?

தென்னாபிரிக்க அணி பலமான அணியாக இருந்து சர்வதேசக் கிரிக்கெட் சபையின் தொடர்களில் எவ்வாறு சறுக்குமோ, அதற்கு எதிர்மாறாக, எவ்வளவு பலவீனமான அணியாக இவ் வகையான தொடர்களைத் தொடங்கினாலும், அதில் ஓரளவுக் காவது சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தும் இயல்பு நியூசிலாந்திற்கு உண்டு. கடந்த முறை சம்பியன்ஸ் கிண்ணத் தில் இரண்டாமிடம் பெற்ற அணி, இம்முறையும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்துமா? விடைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி தெரியவரும்.




# 'குண்டு' வீரர்

பியகம மகிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இலங் கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற் பாட்டில் நடத்தப்பட்ட தேசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டிகளில், 23 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் உடுப் பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி மாணவன் ஆர்.நிமலேந்திரா 14.32 மீற்றர் தூரத்தினை எறிந்து தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசியமட்டப் போட்டியில் ஆண்களுக்கான குண்டு எறிதலில் புதிய சாதனையுடன் தங்கப் பதக்கத் தையும், அகில இலங்கை பாடசா லைகளுக்கிடையிலான ஆண் களுக்கான குண்டு எறிதல் போட் டியில் தங்கப்பதக்கத்தையும் பெற் றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**கனகநாயகம்**
**யசோதரன்**

**வ**டக்கு மற்றும் தலைநகர முன்னணி இந்துப்பாடசாலைகளான யாழ். இந்துக்கல்லூரி மற்றும் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ஆகியன பங்குபெறும் 'இந்துக்களின் போர்' கிரிக்கெட் போட்டி இவ் வருடம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. நீண்ட காலத் தின் பின்னர் இருகல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங் களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போட்டியின் முதல் நாள் ஆட்டம் மழையால் கழுவப்பட வெற்றிதோல்வியற்ற முடிவு கிட் டியது.

கடந்த மே 3, 4ஆம் திகதிகளில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ் இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பை மேற் கொள்வதற்கு தீர்மானித்தது. இதனடிப்படையில் முதலாவது இ னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி 59 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை பெற்றவுடன் தமது துடுப்பாட்டத்தை நிறுத்திக் கொண்டனர்.

துடுப்பாட்டத்தில் கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில், ஹசான் 61, தர்சிகாந் 50, கிருசாந் 42 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் யாழ் இந்துக் கல்லூரி சார்பில், மதுசன் 5, பானுகோபன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். இந்துக் கல் லூரி அணியினர் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 31 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 183 ஓட்டங்களைப் பெற் றிருந்த வேளை, நேரம் நிறைவடைந்து போட்டியானது சமனிலை யில் முடிவுற்றது. துடுப்பாட்டத்தில் யாழ் இந்து சார்பில், மதுசன் 91, கல்கோகன் 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில், திவாகரன் 4 விக் கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது ஹசானிற்க்கும் (பம்பலப்பிட்டி இந்து.), சிறந்த பந்துவீச்சாளர் விருது மதுசனிற்கும் (யாழ். இந்து), சிறந்த களத்தடுப்பாளர் விருது கிருசானிற்கும் (பம் பலப்பிட்டி இந்து.), ஆட்ட நாயகன் விருது மதுசனிற்க்கும் (யாழ். இ ந்து) வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அடுத்த வருடம் 'இந்துக்களின் போர்' யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இந்துக்களின் போர்
## சமனிலையில் நிறைவு









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆனந்தாக் கல்லூரியைத் தோற்கடித்த யாழ். இந்துக் கல்லூரி


■ படங்கள் : சந்துரு

சகல துறைகளிலும் அணித்தலைவர் வாமணன் பிரகாசிக்க யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் இடையிலான வி.ரீ.எஸ்.சிவகுருநாதன் வெற்றிக்கிண்ணத்துக்கான இரண்டாவது, வருடாந்த நட்புறவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ். இந்து அணித்தலைவர் களத்தடுப்பை தேர்ந்தெடுத்தார். இதன்படி, முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு ஆனந்தா கல்லூரி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அவ்வணி சார்பாக, லக்கன ஜெயசேர 64, தனுக மதுசன் 49 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ். இந்துக் கல்லூரி சார்பில், வாமணன், மதுசன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும், சாரங்கன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 50.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 206 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பில், சஜீகன் 68, வாமணன் 44 ஓட்டங்களைப் பெற்றனர். இதன் பின் தனது 2வது இனிங்ஸை ஆரம்பித்த ஆனந்தா கல்லூரி 31.5 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது. பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்ட யாழ். இந்துக் கல்லூரி சார்பில், வாமணன் 6, மதுசன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பின்னர் 103 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தனது 2வது இனிங்ஸை ஆரம்பித்த யாழ் இந்துக் கல்லூரி 34.5 ஓவர்களில் 2 விக்கெட்டை மாத்திரம் இழந்து 105 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் யாழ். இந்து சார்பில் கல்கோகன் 58 ஓட்டங்களைப் பெற்றார். இப் போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருது சஜீகனுக்கும் (யாழ்.இந்து), சிறந்த பந்துவீச்சாளர் விருது வாமணனுக்கும் (யாழ்.இந்து), சிறந்த களத்தடுப்பாளர் விருது தரண ரவீந்துவிற்கும் (ஆனந்தா), ஆட்ட நாயகன் விருது யாழ். இந்து அணித்தலைவர் வாமணனுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IPL
# கனவு நனவானது



Kss.ராஜ்



இந்த வருடத்திற்கான ஆறாவது ஐ.பி.எல் தொடரில் இறுதியில் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி ரோகித் சர்மா தமைமையிலான மும்பை இண்டியன்ஸ் அணி சாம்பியனாகியது. மீண்டும் ஒருமுறை ஹாட்ரிக் ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லும் சென்னையின் கனவு தவிடுபொடி யானது.

ஐ.பி.எல் தொடர் சூதாட்ட பிரச்சனை வீரர்கள் கைது என்று பல பிரச்சனைகளை சந்தித்தாலும், சுவாரஸ்யத்துக்கும் பஞ்சம் இருக்கவில்லை. குறிப்பாக இம்முறை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் செயற்பாடு சிறப்பாக அமைந்தது. சூதாட்ட புகாரில் மூன்று வீரர்கள் கைது செய்யப்பட்டு இருந்தாலும் அதை தவிர்த் துப் பார்த்தால் அந்த அணியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது. மும்பை இந்தியன்ஸ் அணியுடன் தோல்வியுற்றதால் இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பு பறிபோய் மூன்றாம் இடத்தை பிடித்துக்கொண்டது.

ஷேன் வட்சன், ராகுல் ராவிட், ரஹானே, அஞ்சும் சம்சன், கூப்பர் என்று அந்த அணியில் பலர் கலக்கினார்கள் குறிப்பாக ரஹானே, சஞ்சு சம்சன் இருவரும் இந்த தொடரில் சிறப்பாக ஆடினார்கள். ஏற்கனவே இந்திய அணியில் இடம் கிடைத்த ரஹானே கவனிக்க படவேண்டிய ஒரு வீரர். தொடர்ந்து இந்திய அணியில் அவருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். அப் போது எதிர்கால இந்திய அணியின் நட்சத்திரமாக மிளிர்வார் என்பதில் சந்தேகம் இல்லை. 18 வயதான சம்சன் இந்திய அணியில் அவருக்கான இடத்துக்காக காத்திருக்கின்றார். இவர் ஒரு விக்கெட் காப்பாளராகவும் இருக்கின்றமை கூடுதல் பலம்.

சறுக்கிய நட்சத்திரங்கள் : இந்த தொடரில் சச்சின், பொண்டிங், மஹேல, சங்கா, யுவராஜ் சிங் என்று பல முன்னணி நட்சத்திர வீரர் கள் ஆட்டம் சொல்லிக்கொள்ளும் படி இல்லை. அதிலும் மஹேல தவிர ஏனையவர்களுக்கு சில போட்டிகளில் இருந்து நீக்கப்பட்ட (ஓய்வு எடுத்துக்கொண்ட) நிலமையும் வந்தது. தொடர்ந்து பிரகாசிக்கத் தவறும் சச்சின் ஐ.பி.எல் போட்டிகளில் இருந்தான தனது ஒய்வை அறிவித்துவிட்டார்

அடுத்து பொண்டிங் இவரும் முழுவதுமாக கிரிக்கெட்டுக்கு குட்பை சொல்லாம். மஹேல, சங்கா இவர்களும் ஐ.பி.எல் போட்டிகளில் இருந்து விலகி முழுவதுமாக சர்வதேச போட்டிகளில் கவனம் செலுத்தலாம். அதேபோல இன்னும் ஒரு ஜாம்பவான் கில் கிறிஸ்ட் ஆரம்ப போட்டிகளில் மந்தமாக ஆடினாலும் இறுதி ஆட் டங்களில் அதிரடியில் கலக்கினார்.

ஜொலித்த நட்சத்திரங்கள் : ரோகித் சர்மா, தினேஸ் கார்த்திக், ஆரம்பத்தில் சில போட்டிகளில் சிறப்பாக ஆடினாலும் தொடர்ந்து அவர்கள் ஆட்டம் பிரமாதம் என்று சொல்ல முடியாது. பெங்களூர் ரோயல் சேலஞ்சர்ஸ் அணியில் இடம்பெற்ற விராட் ஹோலி, கிறிஸ்கெயில், ஏ.பி.டி. வில்லியர்ஸ், சென்னை அணியின் மைக் ஹசி, ரெய்னா என பல வீரர்கள் இந்த ஐ.பி.எல் போட்டியில் ஜொலித்தார்கள்.

குறிப்பாக கிறிஸ் கெய்ல், புனே வாரியஸ் அணிக்கு எதிராக விளாசிய 175 ஓட்டங்கள் இந்த ஐ.பி.எல் சீசனில் சிறப்பு வாய்ந்த இன்னிங்ஸ். ஆனால் அதைவிடவும் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியில் இடம் பெற்று இருந்த டேவிட் மில்லர் பெங்களூர் அணிக்கு எதிராக அதிரடியாக ஆடி அணியை வெற்றி பெறவைத்த அந்த ஆட்டம், அவரின் சதம் கிறிஸ் கெய்லின் சதத் தைவிட சிறப்பு வாயந்த இன்னிங்ஸ் என்றால் மிகையாகாது. பல இளம் வீரர்கள் இந்த ஐ.பி.எல் தொடரில் ஜொலிக்கவில்லை என் பது குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். தொடர் தடை செய்யப்படுமா?

- விக்கி விக்னேஷ்

பந்துக்குப் பந்து பணம் என பறந்து கொண்டிருக்கும் ஐ.பி.எல். போட்டிகள் ஒட்டுமொத்த சர்வதேச கிரிக்கெட் போட்டிகளையும் விழுங்கி ஏப்பம் விட்டுக்கொண்டிருக்கின்றது. உண்மையான கிரிக்கெட்டை நேசிக்கும், சுவாசிக்கும் பலரும் கவர்ச்சிப் பொருளாகவே ஐ.பி.எல். போட்டிகளை பார்த்து வருகின்றனர். இதனை ஒதுக்கிவிடமுடியாமல் அவர்களும் தொலைக்காட்சி முன் உட்கார்ந்திருப்பதற்கு காரணம், ஒவ்வொருவருக்கும் பிடித்த கிரிக்கெட் நட்சத்திரங்கள் ஒருங்கே சேர்ந்து ஐ.பி.எல்.இல் விளையாடுவது தான்.

இந்தியக் கிரிக்கெட் சபைக்கு பணமீட்டுவது உள்ளிட்ட பல நோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டிகளின் முதன்மை நோக்கம், இந்திய அணிக்காக இளம் வீரர்களை இனங்காண்பது என்பதாகும். ரஹானே, தவான் போன்ற ஓரிருவரைத் தவிர கடந்த ஆறு வருடத்தில் எத்தனை வீரர்களை இனம் காணப்பட்டிருக்கிறார்கள்? இன்னொரு புறம் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுனா குறிப்பிட்டதைப் போல, 'கவாஸ்கர், சச்சின், ட்ராவிட் போன்றவர்கள் ஐ.பி.எல். மூலமாகவா அணிக்குள் வந்தார்கள்?' என்ற கேள்வியும் சிந்திக்க வைக்கிறது.

கடந்த மே, 26 அன்று நிறைவு பெற்ற இறுதி போட்டிதான், ஐ.பி.எல் போட்டிகளின் இறுதி போட்டியாகவும் அமைந்துவிடுமோ என்ற கருத்து தற்போது பரவி வருகிறது. பொதுவாக இந்தியாவில் எதனை நடத்தினாலும், அதனை ஆதரிக்கும் குழுவுக்கு நிகராக, அதனை எதிர்க்கும் குழு ஒன்றும் இருக்கத்தான் செய்யும். ஜனநாயக நாடு என்பதை இந்தியா இந்த விடயத்தில் மாத்திரம்தான் நிலைநிறுத்துகிறது. இதன்படி ஏற்கனவே ஐ.பி.எல் போட்டித் தொடருக்கு இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் எதிர்ப்புகள் காணப்பட்டன.

குறிப்பாக சில மூத்த கிரிக்கட் வீரர்களும் இந்த போட்டிகளை எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். இவ்வாறான ஒரு சூழ்நிலையிலேயே ஐ.பி.எல் போட்டிகளில் அதிக பட்ச சூதாட்டங்கள் இடம்பெற்றதாக தற்போது உறுதியாகியுள்ளது. எந்த தொடரிலும் இல்லாத அளவு, இந்த முறை நடைபெற்ற போட்டிகளில் அதிக அளவு சூதாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் இம்முறை சூதாட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளும் தீவிரமாக இடம்பெற்று வருகிறன.

இந்த குற்றச்சாட்டின் கீழ், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முக்கிய நிர்வாக அதிகாரி குருநாத் மெய்யப்பன், நடிகர் விந்து தாரா சிங், அணி வீரர்கள், சூதாட்டத்தரகர்கள் என பலரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இந்த பிரச்சினைகளுக்கு நடுவே இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் தலைவர் ஸ்ரீனிவாசன் திண்டாடிக் கொண்டிருக்கிறார் என்பது உறுதியான உண்மை. இவர் பதவி விலக வேண்டும் என்ற அழுத்தங்களும் தற்போது அதிகரித்துள்ளன. தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காகவே அவர் இன்னும் பதவி விலகாதிருப்பதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது இவ்வாறிருக்க, இந்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக, இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் மத்திய செயற்குழு கூட்டம் விரைவில் கூடவுள்ளது. இதன் போது அநேகமாக ஐ.பி.எல்.போட்டிகளில் இடம்பெற்ற சூதாட்டங்கள் தொடர்பில் முழுமையாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப் படவுள்ளதாக தகவல்கள் தெரிகின்றன. இவ்வாறான சர்ச்சையான ஒரு சூழ்நிலையில், சர்வதேச கிரிக்கட் சபை இந்த விடயம் தொடர்பில் இதுவரையில் உறுதியான அறிவிப்புகள் எதனையும் வெளியிடவில்லை. இந்த முறைப் போட்டிகளில் இடம்பெற்ற சூதாட்ட விவகாரங்களை மும்பை போலிசாரே அதிக முனைப்புடன் விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்றனர். இதற்கான பின்னணி என்னவென்றும் தெரியவில்லை.

எனினும் கடந்த ஐந்து வருடங்களாக கிண்ணத்தை வெல்லாத மும்பை இந்தியன்ஸ் அணி, இம்முறை கிண்ணத்தை சுவீகரித்தது. இது மும்பை பொலிசாரை நிம்மதி அடைய செய்து, சூதாட்டம் குறித்த கைதுகளையும், விசாரணைகளையும் இடைநிறுத்திவிடுமா? அல்லது மேலும் தீவிரமடைந்து, ஐ.பி.எல் போட்டிகளை தடை செய்யும் அளவுக்கு செல்லுமா? என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த கூற்றுக்கு காரணம், ஐ.பி.எல் போட்டிகளில் களமிறங்கிய அணிகளில் மிகவும் பலம் வாய்ந்த அணியாக மும்பை இந்தியன்ஸ் காணப்பட்டது. எனினும் இந்த அணி தொடர்சியாக சாதிக்க தவறியமைக்கு, மும்பை இந்தியன்ஸ் அணியை இலக்கு வைத்து ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை சிலத் தரப்பினர் ஏற்படுத்தி வருகின்றனர். இதன் விளைவே மும்பை பொலிசார் சூதாட்ட விவாகாரத்தை தீவிரமாக எடுத்துள்ளமைக்கான காரணம் என்றும் கூறப்படுகிறது.

நடப்பு சாம்பியன் என்ற நிலையில் இந்த தொடரில் களம் இறங்கிய கொல்கத்தா அணியின் ஆட்டம் மிக-மோசம். சம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளுக்கான இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட கம்பீர் இந்த ஐ.பி.எல். தொடரில் பெரிதாக பிரகாசிக்கவில்லை அவர் மட்டுமல்ல கொல்கத்தா அணி வீரர்கள் பலரும் இந்த தொடரிம் மிக மோசமாக ஆடினார்கள். அதேபோல புனே வாரியஸ், டெல்லி அணிகள், சொல்லவே தேவையில்லை. மிக மிக மோசமான ஆட்டத்தால் இறுதி இரண்டு இடங்களையும் பிடித்துக் கொண்டார்கள்.

இந்த தொடரில் அறிமுக அணியாக நுழைந்த சன்ரைசஸ் ஹைதரபாத் அணியினர் ஒரளவு சிறப்பாக ஆடி நான்காவது இடத்தை பிடித்தார்கள். பெங்களூர் அணி ஆரம்பத்தில் சிறப்பாக ஆடினாலும் கடைசியில் சில போட்டிகளில் தடுமாறியதால் ப்ளே-ஓப் சுற்று வாய்ப்பை இழந்தது.

ஆக மொத்தம் இந்த தொடரில், சென்னை, மும்பை, ராஜஸ்தான் அணிகளின் ஆட்டங்கள் சிறப்பாக அமைந்தன. பல நட்சத்திரங்கள் சொதப்பியும் சில நட்சத்திரங்கள் கலக்கியும் சில இளம் வீரர்கள் ஜொலித்தும், இந்த ஐ.பி.எல் தொடர் முடிவுக்கு வந்து விட்டது.

இந்த ஐ.பி.எல் தொடரில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் சூப்பர் கிங்ஸ் அணியின் மைக் ஹசி முதலிடத்தைப் பிடித்தார். 17 ஆட்டங்களில் விளையாடிய ஹசி 6 அரைசதங்களுடன் 733 ஓட்டங்களைக் குவித்தார். இதற்காக ஹசிக்கு ரூ.10 லட்சம் பரிசுத் தொகை கிடைத்தது. அவருக்கு அடுத்தபடியாக பெங்களூர் அணியின் கிறிஸ் கெயில் 16 ஆட்டங்களில் விளையாடி 708 ஓட்டங்களைக் குவித்தார். இவர்களைத் தவிர வேறு யாரும் 700 ஓட்டங்களை எட்டவில்லை.

இந்த ஐ.பி.எல் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் டுவைன் பிராவோ முதலிடம் பிடித்தார். 18 போட்டிகளில் விளையாடிய இவர், 32 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இவருக்கும் ரூபா 10 லட்சம் பரிசுத் தொகை கிடைத்தது.

என்னதான் சுவாரஸ்யமாக இருந்தாலும் இந்த ஐ.பி.எல் தொடரில் எழுந்த சூதாட்டச் சர்ச்சைகள் இனி வரும் ஐ.பி.எல் தொடர்கள் மீது ரசிகர்களின் எதிர்ப்பார்பை பெருமளவு குறைத்துவிடும் என்பது மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்து - ஓர் அறிமுகம்

■ வீரமலை ரவிமோகன்
பூனுகல தோட்டம், எட்டியாந்தோட்டை

1895 ஆம் ஆண்டு அமெரிக்காவில் வில்லியம் பு.மோர்க் கன்

என்பவரால் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது.

முதலில் இவ்விளையாட்டு "மின்டொனெற்" என்ற பெயரால் அழைக்கப்பட்டது.

1896 ஆம் ஆண்டு கலாநிதி. அல்பிரட் ஹீல்ஸ்டட் என் பவர் இவ்விளையாட்டின் இயல்பிற்கு ஏற்ப இது வொலிபோல் எனப் பெயர் சூட்டினார்.

1900 ஆம் ஆண்டு இவ்விளையாட்டு கனடாவிலும், இந் தியாவிலும் அறிமுகம் செய்யப்பட்டது.

1946 ஆம் ஆண்டு வொலிபோல் சம்மேளனம் அமைப்பு குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1947 ஆம் ஆண்டு பிரான்சின் பரீஸ் நகரத்தில் பிரான்சிய ரான போல்லிவாவுட்டின் பங்களிப்புடன் முதலாவது சர்வதேச வொலிபோல் சம்மேளனம் ஸ்தாபிக்கப்பட்டது.

தற்போது இச்சம்மேளனம் சுவிஸ்சர்லாந்தில் லூசேன் நகரத்தில் அமைக்கப்பட்டுள்ளதுடன், சம்மேளனமாகக் காணப்படுகின்றது.

1949 ஆம் ஆண்டு ஆண்களுக்கான முதலாவது சர் வதேச போட்டிகள் செக்கோச்லோவாக்கியாவில் நடைபெற் றது. இப்போட்டியின் வெற்றி கேடயத்தை ரஷ்யா சுவீகரித்துக் கொண்டது.

1952 ஆம் ஆண்டு பெண்களுக்கான முதலாவது சர் வதேச கரப்பந்து போட்டி இடம்பெற்றது. இப்போட்டியிலும் வெற்றிக்கேடயத்தை ரஷ்யா சுவீகரித்தது சிறப்பம்சமாகும்.

1964 ஆம் ஆண்டு ஆண், பெண் இருபாலாருக்குமாக கரப்பந்து போட்டிகள் தனித்தனியாக உலக ஒலிம்பிக்கில் நடைபெற்றது முக்கிய அம்சமாகும்.

இன்று சர்வதேசமட்டத்தில் பிரபல்யம் வாய்ந்தவிளையாட்டு போட்டியாக கரப்பந்தாட்டம் திகழ்ந்து வருகின்றது.

### இலங்கையின் கரப்பந்தாட்ட வளர்ச்சி

இலங்கையின் தேசிய விளையாட்டாக போற்றப்படும் கரப் பந்து போட்டி 1916 ஆம் ஆண்டு வோல்டர் சீ.கமெக் என் பவரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

1922 ஆம் ஆண்டு கொழும்பு நகரில் 25 கரப்பந்தாட்ட சங் கங்கள் தாபிக்கப்பட்டமை இலங்கையின் கரப்பந்தாட்ட வளர் ச்சி யில் முக்கியமானதாகும்.

1930 ஆம் ஆண்டு "இலங்கை வொலிபோல் சங்கம்" உருவாக்கப்பட்டது.


1932 ஆம் ஆண்டு "வொலிபோல் போட்டி" என்ற பெயரில் முதலாவது சவால் கிண்ண போட்டிகள் நடத்தப்பட்டது. இக்கி ண்ணத்தை "பிரைஸ் பார்க் விளையாட்டு கழகம்" சுவீக ரித் தது.

1941 ஆம் ஆண்டு ஆறு பேர் கொண்ட குழுவினரால் "அகில இலங்கை வொலிபோல் சங்கம்" அமைக்கப்பட்டது.

1946 ஆம் ஆண்டு "அரச ஊழியர் வொலிபோல் சங்கம்" உருவாக்கப்பட்டது.

1951 ஆம் ஆண்டு அனைத்து சங்கங்களையும் சேர்த்து "இலங்கை வொலிபோல் சம்பேளனம்" அமைக்கப்பட்டது.

1958 ஆம் ஆண்டு இலங்கை வொலிபோல் சம்பேளனத் துக்கு பதிலாக "வொலிபோல் கட்டுப்பாட்டுச் சபை" அமைக்கப் பட்டது.



இவ்வாறு வளர்ச்சியடைந்து வந்த கரப்பந்தாட்டம் இலங் கையின் தேசிய விளையாட்டாக காணப்படுகின்றது. கல்வி மற்றும் உயர்க்கல்வி அமைச்சினால் கரப்பந்தாட்டம் கட்டாய விளையாட்டாக பாடசாலை மட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட் டது. இன்று இலங்கையில் கரப்பந்தாட்டப் போட்டிகள் நகரங் களைப் போன்று கிராமங்களிலும் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கான பிரதான காரணம் இப்போட்டிகளை குறுகிய இட வசதிகளுடன், குறைந்தப் பணச்செலவுடன் நடாத்த முடிகின் றமையாகும். இலங்கைப் பாடசாலை மட்டத்தில் கல்வி மற் றும் உயர்கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறைப் பிரிவி- னால் அதிகளவில் ஊக்கமளிக்கப்பட்டு வருவதோடு, சிறந்த பயிற்றுவிப்பாளர்கள் ஊடாக பயிற்சிகள் நடத்தப்பட்டும் வருகின்றது. அத்தோடு மாணவர்களுக்கு இடையிலான போட்டிகளும் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் பாடசாலை, கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மாகாண மட்டம் மற்றும் தேசிய நிலையிலான போட்டிகளாகவும் நடாத்தப்படுகின்றன.

### கரப்பந்தின் வலையும், உணர்த்தடியும்

வலையின் நீளம் 09 மீற்றரும், அகலம் 01 மீற்றரும் ஆகும். வலையின் ஒரு கண் 10 சென்றிமீற்றர் அளவுள்ள கறுப்பு சதுரங்களாக இருத்தல் வேண்டும். வலையின் மேற்பகுதியில் 05 சென்றிமீற்றர் அகலமான வெள்ளை நிற கன்வஸ் நாடா வலையின் முழு நீளத்துக்கும் இடப்பட்டிருக்கும்.

உணர்த்தடி என்பது கண்ணாடி இழை போன்ற வளையக் கூடிய (P.V.Cகுழாய்) பொருளால் ஆன இரண்டு தடிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தடிகளின் ஒவ்வொரு சென்றி மீற்றருக்கும் வெள்ளை, சிவப்பு நிறங்களால் மாறி மாறி நிறம் தீட்டப்பட்டிருக்கும்.

### கரப்பந்து விளையாட்டின் திறன்கள்

பணித்தல் (Service), பெற்றுக்கொள்ளல் (Receiving), ஒழுங்கு செய்தல் (Setting), அறைதல் (Spiking), தடுத்தல் (Blocking), மைதானத்தை காத்தல், என்ற முக்கிய விடயங்கள் விளையாட்டின் போது பின்பற்றப்படுகின்றன. இத்திறன்களை மேலும் சில உப பிரிவுகளை கொண்டு வகைப்படுத்தலாம்.

பணித்தல் இரண்டு வகைப்படும். அதாவது, கீழ்க்கை பணித்தல் - மேற்கை பணித்தல். மேற்கை பணித்தல் மேலும் மூன்று வகைப்படும். டெனிஷ் பணித்தல் - மிதந்து பணித்தல் - உயர பாய்ந்து பணித்தல்.

ஒழுங்கு செய்தல் இரு வகைப்படும். கீழ்க்கை ஒழுங்கு செய்தல் - மேற்கை ஒழுங்கு செய்தல்.


அறைதல் நான்கு வகைப்படுத்தப்படுகின்றது. வலையின் அருகில் - வலையின் பின் - பக்கமாக அணுகுதல் - நேராக அணுகுதல்.


தடுத்தல் மூன்று வகைப்படும். ஒருவராக தடுத்தல் - இருவராக தடுத்தல் - மூவராக தடுத்தல். இவ்வாறு கரப்பந்து விளையாட்டின் திறன்கள் காணப்படுகின்றது.

### கரப்பந்தும், அதன் விசேட இயல்பும்

உட்பகுதி இறப்பர் அல்லது அதற்குச் சமமான டியூப் பினாலும் வெளிப்பகுதி மடியக்கூடிய தோலினால் ஆக்கப்பட்ட கூட்டினாலும் ஆன கோள வடிவினதாகப் பந்து இருத்தல் வேண்டும். பந்தின் நிறம் ஒரே தன்மையிலான இளம் நிறமாகவும், பந்தின் சுற்றளவு 65-67 சென்றிமீற்றருக்கு இடைப்பட்டதாகவும், நிறை 260-280 கிராம் கொண்டதாகவும் இருத்தல் அவசியம். அத்தோடு பந்தின் உள்வளி அமுக்கம் சதுர சென்றிமீற்றருக்கு 0.40 - 0.45 கிலோ கிராமிற்கு இடைப்பட்டதாகவும் இருக்கவேண்டும்.

போட்டிக்காகப் பயன்படுத்தப்படும் எல்லாப்பந்துகளும் சுற்றளவு, நிறை, வளி, அமுக்கம் என்பவற்றில் ஒரே தன்மையாக அமைதல் வேண்டும். சர்வதேச போட்டிகளுக்கு சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனத்தினால் அனுமதித்து வழங்கப்பட்டுள்ள பந்துகளையே பயன்படுத்தல் வேண்டும்.



### பங்குப்பற்றுவோர் விபரம்

கரப்பந்தாட்டத்தில் பங்குபற்வோர் பற்றிப் பார்த்தால், குழுவொன்றில் 12 விளையாட்டு வீரர்களும் (இதில் 06 பேர் மாத்திரம் போட்டியின் போது ஈடுப்படுவர்), பயிற்றுவோரும், ஒரு உதவிப் பயிற்றுவோரும், ஒரு முகாமையாளரும், வைத்தியர் ஒருவரும் உள்ளடங்குவர். சர்வதேச போட்டிகளுக்கான மேற்படி வைத்தியர் சர்வதேச கரப்பந்தாட்டச் சம்பேளனத்தின் அங்கிகாரம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.

### புள்ளிவழங்கல் முறை

கரப்பந்தாட்டத்தின் புள்ளி வழங்கும் முறைத்தொடர்பாக பார்த்தால் சர்வதேச சட்டத்திட்டங்களின் படி போட்டியில் வெற்றிப் பெறுவதற்காக 5 சுற்றுகளில் 3 சுற்றுக்களில் வெற்றிப்பெற வேண்டும். முதல் 4 சுற்றுக்களில் 25 புள்ளிகளை பெறவேண்டும். இறுதி சுற்றில் வெற்றிப்பெறுவதற்காக 15 புள்ளிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், இரண்டு அணிகளும் 24=24 என்ற சமமான புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் 2 புள்ளிகளுக்கான வித்தியாசம் ஏற்படும் வரை போட்டி தொடர்ந்து நடாத்தப்படும். முதல் 4 சுற்றுக்களும் இவ்வாறே இடம்பெறும். இறுதி சுற்றின் போது 24=24 என்ற சமமானப் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டால் திரும்பவும் 2 புள்ளிகள் வித்தியாசம் ஏற்படும் வரை போட்டி நடைபெறும்.

### கரப்பந்து மைதானம்

- கரப்பந்து மைதானம் 18 மீற்றர் நீளமும்,09 மீற்றர் அகலமும் உடைய செவ்வகத்தன்மையாக இருக்கும்.
- மைதானத்தின் எல்லைகளுக்கு அப்பால் சுதந்திர வலயம் 3 மீற்றருக்கு குறையாமலும், மைதானத்தின் உயரப் பகுதிகளில் (வெளியில்) சுதந்திர வலயம் உட்பட 07 மீற்றர் உயரம் வரை தடைகளற்ற வெளியாக இருத்தல் வேண்டும்.
- சர்வதேச போட்டிகளில் சுதந்திர வலயம் பக்கக்கோடுகளில் இருந்து 05 மீற்றரும் பின்பக்கக் கோட்டில் இருந்து 08 மீற்றர் வரை இருப்பதுடன், மேற்பகுதி ஆகக் குறைந்தது 12.5 மீற்றர் உயரம் வரை தடைகளற்ற வெளியாகவும் இருக்க வேண்டும்.
- உள்ளக விளையாட்டு அரங்குகளில் மைதானம் இளநிறத்தை கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- சர்வதேச போட்டிகளுக்காக எல்லைக்கோடுகள் வெள்ளை நிறத்தாலும், மைதானத்தின் மேற்பரப்பும், சுதந்திர வலயமும் வேறுப்பட்ட நிறங்களாலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- மைதானத்தின் எல்லா எல்லைக்கோடுகளும் 05 சென்றிமீற்றர் அகலமானதாகவும், மைதானத்தின் கோடுகள் ஏனைய கோடுகளின் நிறங்களைவிட இள நிறமானதாகவும் இருத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு வீரர்களின்

## திடீர் உயிரிழப்பும் தடுப்பதற்கான வழிமுறைகளும்



DR.A.A.M.FUHAIM
(MBBS, PGDip in sports medicine)
விளையாட்டு மருத்துவப்பிரிவு,
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை,
கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை.

உலகளாவிய ரீதியில் பல இலட்சக்கணக்கான மக்கள் விளையாட்டுக்களிலும் உடற்பயிற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான விளையாட்டுக்கள் மூலம் உடல் உளத்திற்கு பல்வேறு வகையான நன்மைகள் கிடைக்கின்றன. இது மனவழுத்தம், கவலைகளைக் குறைப்பதுடன் வெற்றிதோல்வி, சகிப்புத்தன்மை, ஒழுக்கம், சமூகஒற்றுமை, தலைமைத்துவம் போன்ற நல்ல பண்புகளை மாணவர்களிற்கு வளர்ப்பதுடன் தொற்றல்லாத நோய்களிலிருந்தும் (non communicable disease உ-ம் : .உயர் குருதியமுக்கம், சீனிவியாதி, மாரடைப்பு, புற்று நோய்) மக்களைப் பாதுகாக்கின்றது.

இவ்வாறான நன்மைகளை உண்டாக்கும் விளையாட்டுக்களினால் இறப்புக்களும் சம்பவித்துக் கொண்டுதான் இருக்கின்றது. இவ்விறப்புக்கள் வெளிப்படையான உபாதைகள் சார்ந்ததாகவும் சில வேளைகளில் எவ்வித உபாதைகள் கண்களிற்கு புலப்படாமலும் திடீர் என மைதானங்களில் நிகழ்கின்றது. விளையாட்டு மருத்துவமானது (sports medicine) விளையாட்டில் ஈடுபடும் மக்களிற்காக உருவாக்கப்பட்ட மருத்துவத்தின் வளர்ச்சியடைந்துவரும் ஒரு துறையாகும். இதன் மூலம் விளையாட்டு வீரர்களின் ஆற்றல்கள் மேம்படுத்தப்படுவதுடன் உபாதைகளைத் தடுத்து மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கான வழிமுறைகளையும் சொல்லித்தருகின்றது.

விளையாட்டு மருத்துவமானது மேலைத்தேய நாடுகளில் வெகுவாக வளர்ச்சியடைந்துள்ளதுடன் இவ்வாறான திடீர் இறப்புக்கள் குறைந்துள்ளதுடன் விளையாட்டுக்களும் மேலோங்கி இருக்கின்றது. தற்போது நமது நாட்டிலும் இதன் தேவை உணரப்பட்டுள்ளதுடன் அனைத்து தரப்பிலும் இதன் முன்னேற்றத்திற்கு உறுதுணை வழங்கி விளையாட்டினை முன்னேற்றுவதுடன் வீரர்களையும் பாதுகாப்பதற்கு உதவ முன்வர வேண்டும்.

விளையாட்டு வீரர்களின் (மாணவர்களின்) திடீர் உயிரிழப்பு (sudden death of athletes)

இவ்வாறான உபாதைகளற்ற திடீர் உயிரிழப்புகள் பொதுவாக வெளிப்படையாக ஆரோக்கியமான விளையாட்டு வீரர்களில் எதிர்பாராத விதமாக சடுதியான முறையில் ஏற்படுகின்றது. ஆண்டுதோறும் விளையாட்டில் ஈடுபடும் வீரர்களின் 200,000 பேரில் ஒருவருக்கு இவ்வாறான உயிரிழப்பு சம்பவிக்கின்றது. இது பெண்களைவிட ஆண்களிற்கு 5 மடங்கு அதிகமாக நிகழ்கின்றது. ஏறத்தாழ 80 வீதத்திற்கு மேலான உயிரிழப்புகள் இதயத்துடன் சம்பந்தப்பட்ட காரணிகளால் நிகழ்கின்றது.

இவ்வாறான உயிரிழப்புகள் போட்டியுடன் கூடிய விளையாட்டுக்களில் ஏற்படுகின்றது. (competitive and endurance sports உ-ம் :. கால்பந்து, கூடைப்பந்து, மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம்) இந்த ஆண்டில் நமது நாட்டில் இதுவரை 4 மாணவர்களும் ஒரு வயோதிபரும் இவ்வாறான விளையாட்டுக்களின் போது இறந்துள்ளதுடன் வெளிநாடுகளிலும் பலர் இறந்திருக்கின்றனர்.

இதயத்துடன் சார்ந்த உயிரிழப்புகள் (sudden cardiac death)

இங்கு பிறப்புடன் அல்லது பரம்பரையுடன் சார்ந்த இதயத்தின் கட்டமைப்பு அல்லது தொழிற்பாட்டில் அசாதாரண தன்மை காணப்படுகின்றது.

வீரர்கள் கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபடும் போது அங்கு இதயத்தின் தொழிற்பாடும் ஓமோன்களின் தொழிற்பாடும் அதிகரிக்கின்றது. இதன் காரணமாக இவ்வாறான அசாதாரண நோயுள்ள இதயங்களினால் தொடர்ச்சியாக தொழிற்படமுடியாமல் இதயத்தின் இயக்கம் சடுதியாக தடைப்பட்டு மரணங்கள் சம்பவிக்கின்றது.

35 வயதுக்கு உட்பட்டவர்களின் உயிரிழப்பிற்கான முக்கிய காரணியாக Hypertrophic cardiomyopathy எனும் இடது இதயவறைக் கட்டமைப்பில் ஏற்படும் அசாதாரண மாற்றத்தினால் சம்பவிக்கின்றது. 35 வயதுக்கு மேற்பட்டவர்களின் உயிரிழப்பானது இதயத்திற்கு குருதியினை வழங்கும் முடியுரு நாடியில் (coronary artery) ஏற்படும் அடைப்புக்களின் மூலம் ஏற்படுகின்றது. (atherosclerotic coronary artery disease)

இளம் வீரர்களின் உயிரிழப்புக்களின் (35 வயதுக்கு குறைவான) முக்கியமான காரணிகள்.

இதயத்தின் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள்.
*Hypertrophic cardiomyopathy
*Congenital coronary artery anomalies
*Aortic rupture (Marfan`s Syndrome)
*Myocarditis
*Arhythmogenic right ventriculer dysplasia

இதயத்தின் தொழிற்பாட்டிற்கான கணத்தாக்கத்தில் ஏற்படும் மாற்றத்தினால் ஏற்படும் உயிரிழப்புகள் (conduction system defects)
*WPW syndromes
*Long QT syndromes
*Brugada syndromes
*மற்றும் இடது நெஞ்சுப்பகுதியில் ஏற்படும் சடுதியான அமுத்தம் - Commotio Cordis

இதயத்துடன் சாராத திடீர் உயிரிழப்புக்கான காரணிகள்
*Heat Stroke/hyperthermia
*ஊக்கமருந்துப்பாவனை(drug abuse)
*Rabdomyolysis associated with sickle cell trait
*கடுமையான மூச்சு வியாதி- status asthmeticus
*மைதானத்தில் ஏற்படும் இடிமின்னல் தாக்கம்

Hypertrophic cardiomyopathy

இது இளம் விளையாட்டுவீரர்களின் உயிரிழப்பிற்கு முதன்மையான காரணியாகும். இது பிறப்புடன் சார்ந்த இதயத்தின் இடது பக்கவறையின் சுவரின் கட்டமைப்பில் ஏற்படும் அசாதாரணமான தடிப்படைந்த தன்மையாகும். இங்கு கடுமையான விளையாட்டுக்களில் ஈடுபடும்போது உடலுக்குத் தேவையான குருதியினை அனுப்ப முடியாத நிலையில் இதயத்தின் தொழிற்பாடு சடுதியாக பாதிக்கப்படுவதனால் உயிரிழப்பு ஏற்படுகின்றது. ஆண்களிற்கும் பெண்களிற்கும் சமமானதாகவும், 500 பேரில் ஒருவருக்கும் இவ்வாறான தன்மை காணப்படுகின்றது.

தொடரும்...






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் பழைய மாணவர் மன்றம் நடத்திய சினேகபூர்வ மென்பந்து கிரிக்கற் சுற்றுப்போட்டி ஒன்பதாவது தடைவையாக நீர்கொழும்பு கோட்டை (கொட்டுவ) மைதானத்தில் நடைபெற்றது. பழைய மாணவர் மன்றத்தின் தலைவர் நீர்கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சதீஸ் மோகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மேல்மாகாண பெருந்தெருக்கள் அபிவிருத்தி, கால்நடை வளர்ப்பு, கட்டிட நிர்மாணம், மீன்பிடி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் நிமல்லான்ஸா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் அதிபர் என்.கணேசலிங்கம், தொழிலதிபர் பி.பரத்குமார் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக பங்குபற்றினர். ஐந்து ஓவர்களை கொண்ட இந்த கிரிக்கற் சுற்றுப் போட்டியில் 26 அணிகள் பங்குபற்றின. இறுதிப் போட்டியில் நிகம்பு அஸஸ் (Negombo Aces) அணி வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. 2ஆம் இடத்தை யோர்க் செயார் (York Shire) அணி பெற்றுக் கொண்டது. இந்தப் போட்டியில் யோர்க் அணியை சேர்ந்த ரெமோசன் சிறந்த பந்து வீச்சாளராகவும், ஏ.தோமஸ் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஆட்டநாயகன் விருது மற்றும் சுற்றுப் போட்டிக்கான சிறந்த வீரர்களாக (Negombo Aces) நிகம்பு அஸஸ் வீரர்களிருவர் தெரிவு செய்யபட்டனர்.

(படங்கள் : எம்.இசட்.ஷாஜகான்)





2ம் இடத்தினைப் பெற்ற 19 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்ட அணி

நீர்கொழும்பு கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற விஜயரத்தினம் இந்து மத்தியக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களை பாராட்டி கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் என்.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நீர்கொழும்பு கோட்டக் கல்விக் காரியாலயத்தைச் சேர்ந்த அலுவலரும் முன்னாள் உடற்கல்வி ஆசிரிய ஆலோசகருமான எம்.இஸட்.ஷாஜகான் கலந்து கொண்டு விசேட உரை நிகழ்த்தியதுடன் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி வைத்தார்.



3ம் இடத்தினைப் பெற்ற 17 வயதுப்பிரிவு வலைப்பந்தாட்ட அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்றிபெற்ற வித்தியானந்தா அணித்தலைவர் இஃறாய்ஸ் முதலில் தமது அணி களத்தடுப்பில் ஈடுபடுவதாக முடிவெடுத்தார். அதற்கிணங்கக் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய கல்லூரி அணி 40.4 ஓவர்களில் 182 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் அணித்தலைவர் ரூபன் கம்சிகாந் 34 ஓட்டங்களையும், சுரேஸ் 24, மதன் 24 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்தவீச்சில் வித்தியானந்தா கல்லூரி அணி சார்பாக அருணோதயம் அஞ்சயன் 11 ஓவர்களில் 65 ஓட்டங்கைளக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், விதுசன் 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் தமது முதலாவது இனிங்ஸிற்காகத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வித்தியானந்தா கல்லூரி அணி, 33.3 ஓவர்களில் 93 ஓட்டங்களுக்குள் சுருண்டது. துடுப்பாட்டத்தில அருண 32, இஃறாய்ஸ் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் கனகரத்தினம் ம.ம.வி சார்பாக கம்சிகாந் 3, மதன், உதயா தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


# 'நண்பர்கள் சமர்'

## கிண்ணத்தை வென்றது கனகரத்தினம் ம.ம.வி.

மது


அணித்தலைவர் ரூபன் கம்சிகாந்தின் சகலதுறை ஆட்டம் அணிக்கு பலம் சேர்க்க, முதலாவது 'நண்பர்களின் சமர்' துடுப்பாட்டப் போட்டியில் 95 ஓட்டங்களால் யாழ். கனகரத்தினம் மத்திய கல்லூரி அணி வெற்றி கொண்டது. இவ்வருடம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட நண்பர்களின் சமர் எனப்படும் கனகரத்தினம் ம.ம.வி. - முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப் படாத பந்துபரிமாற்றங்கள் கொண்ட இரண்டு நாள் துடுப்பாட்டப் போட்டி கடந்த மாதம் இடம்பெற்றது.

89 ஓட்டங்கள் முன்னிலையில் தமது இரண்டாவது இனிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி, 30 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 143 ஓட்டங்களைப் பெற்ற போது, தமது ஆட்டத்தினை இடைநிறுத்திக் கொண்டது. துடுப்பாட்டத்தில் உதயா 30, கம்சிகாந் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் வித்தியானந்தா கல்லூரி அணி சார்பாக விதுசன், அஞ்சயன், நிசாவி தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



233 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய வித்தியானந்தா கல்லூரி அணியால் 60 ஓவர்களில் 138 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. துடுப்பாட்டத்தில் தனித்து நின்று போராடிய பார்த்தீபன் விதுசன் 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் கம்சிகாந், பிரசாந் ஆகியோர் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியில், சிறந்த துடுப்பாட்ட வீரராக 2வது இனிங்ஸில் 68 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த வித்தியானந்தா கல்லூரியினைச் சேர்ந்த. பார்த்தீபன் விதுசனும், சிறந்த பந்துவீச்சாளராக இரண்டு இனிங்ஸிலும் சேர்த்து- 7 இலக்குகளைக் கைப்பற்றிய அருணோதயம் அஞ்சயனும், சிறந்த களத்தடுப்பாளராக கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியின் அருளானந்தம் தர்சனும் தெரிவு செய்யப்பட்டதுடன், போட்டியின் ஆட்ட நாயகனாக இரு இனிங்ஸிலும் சேர்த்து 50 ஓட்டங்களையும், 6 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியின் அணித் தலைவர் ரூபன் கம்சிகாந் தெரிசெய்யப்பட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர் வந்ததால் தலைவிதி மாறுமா?

■ எம்.ஆர்.கோபு

'வடக்கு வீரர்களுக்கு சம்பளத்துடன் கூடிய பயிற்சி', 'யாழ்ப்பாணத்தில் புற்தரை ஆடுகளம்', 'எதிர்வரும் எஸ்.எல்.பி.எல். போட்டிகளில் வடக்கு, கிழக்கு வீரர்கள் விளையாடுவார்கள்', 'இலங்கை கிரிக்கெட் சபையுடன் இணைந்து வடகிழக்கு வீரர்களுக்காக பல செயற்றிட்டங்கள்' என பல வாக்குறுதிகளை யாழ்ப்பாணத்தில் அள்ளி வீசிச்சென்றிருக்கின்றார் இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், தற்போதைய இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வுக் குழுத் தலைவருமான சனத் ஜெயசூரிய.

இது என்னவோ, தேர்தலில் போது அரசியல்வாதிகள் அள்ளி வழங்கும் சலுகையைப் போல தென்பட்டாலும் 'சனத் செய்வார்' என்ற நம்பிக்கை மட்டும் எல்லோரிடமும் இருக்கின்றது. ஏனெனில், சனத் ஜெயசூரியா என்ற தனி மனிதன் ஒரு விளையாட்டு வீரராக எல்லோரிடமும் நன்மதிப்பைப் பெற்றிருக்கின்றார். ஆனால், இன்று அவர் அரசியல்வாதியல்லவா? அதனால் 'இந்த வாக்குறுதிகள் அனைத்தும் வெறும் ஆசை வார்த்தைகள் தானா?' எனவும் அச்சப்பட வைக்கின்றது. ஆனாலும், 'சனத் தேர்வுக்குழுவின் தலைவராக செயற்படத் தொடங்கி இரண்டு மாதங்கள் தானே ஆகின்றன. அதனால், சனத் ஜெயசூரியாவின் விஜயத்தில் எந்த கபட நோக்கமும் இருக்காது' எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

இவ்வாறு நேர், மறையான ஊகங்களுக்கு மத்தியில் சனத்தின் யாழ். விஜயம் நிறைவடைந்திருந்தாலும் இவை எல்லாவற்றுக்கும் விரைவில் பதில் கிடைத்துவிடும் என்பது மட்டும் உறுதி. இரண்டு மாதங்களில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் புற்றரை ஆடுகளம் அமைக்கப்படவிருக்கின்றது. இதற்கான முதற்கட்டப் பணிகளை சனத்தே ஆரம்பித்து வைத்தார். சனத்தால் இனங்காணப்பட்ட வீரர்கள் விரைவில் சம்பளத்துடன் கூடிய தேசிய பயிற்சிகளுக்கு அழைக்கப்படவிருக்கின்றனர். எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள எஸ்.எல்.பி.எல். போட்டிகளில் வடகிழக்கு வீரர்களில் சிலர் தங்கள் மாகாண அணிகளைப் பிரதி நிதித்துவப் படுத்துவார்கள். இவற்றில் ஒன்றோ, பலவோ நிகழாத சந்தர்ப்பத்தில் சனத் மீதான எதிர் விமர்சனங்களை நாங்கள் அழுத்தமாக முன் வைக்கலாம்.


இலங்கைத் தேசியக் கிரிக்கெட் அணியில் தமிழ் வீரர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படுவதில்லை. அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள் என்ற நிலைமை கடந்த பல வருடங்களாகவே இருக்கின்றது. இது உண்மையென்றாலும், அதனை முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளவும் முடியாது. காரணம், எம்மவர்கள் திறமைகளின் பின்தங்கி நிற்கிறார்கள். அவர்கள் படிப்புக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை விளையாட்டுக்குக் கொடுப்பதில்லை என பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். சனத் மூலம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படும் வீரர்களில் ஓரிருவராவது இன்னும் ஒருவருட காலப்பகுதியில் தேசிய அணியில் விளையாடுவார்கள் என நாங்கள் எதிர் பார்க்கலாம். அவ்வாறில்லாமல் 'சர்வதேச அனுபவங்களை வீரர்கள் பெறுவதற்காகவே அணியில் இணைத்தோம்' என்ற வாய்ப்பாட்டை இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக் குழுவினால் ஆண்டுதோறும் பாட முடியாது.

(ஏற்கனவே தேசிய பயிற்சிக்காக அழைக்கப்பட்ட வடகிழக்கு வீரர்கள் மூவரும் எந்தவொரு பயிற்சிப் போட்டிகளிலும் தேசிய அணி வீரர்களுடன் இணைந்து விளையாட வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.)

'திறமையான ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் அவர் சாதித்தே தீருவார்' என்பதற்கு சனத்தே மிகச்சிறந்த உதாரணம். அதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும். அப்படியான வாய்ப்புக்களை சனத் ஜெயசூரியா வடகிழக்கு வீரர்களுக்கு வழங்கும் பட்சத்தில் திறமையானவர்கள் சாதிப்பார்கள்.

மாத்தறையின் கிராமம் ஒன்றிலிருந்து இன்று உலகெல்லாம் பேசப்படும் சனத் ஜெயசூரியா நிச்சயம், தான் தாண்டி வந்த தடைகளையும், சவால்களை உணர்ந்தவராகவே இருப்பார். இதனாலேயே சனத்தை பலரும் நம்புவதற்கு தயாராக இருக்கின்றார்கள். கடந்த காலங்களில் கூட இலங்கை கிரிக்கெட் சபையிலிருந்து எவரும் முழு நேரமாக தமது கவனத்தை வடகிழக்கு வீரர்கள் மீது செலுத்தியதில்லை. கடந்த சில வருடங்களாக இலங்கையணியின் முன்னாள் வீரர் அரவிந்த டி சில்வா யாழ்ப்பாணத்தில் சில கிரிக்கெட் பயிற்சி முகாம்களை நடத்தியபோதும், அவரால் தேசிய அணிக்குள் எந்த வடகிழக்கு வீரரையும் உள்வாங்க முடியவில்லை. அந்த வகையில் இரண்டு நாட்கள் முற்று முழுதாக மைதானத்தில் இருந்து வடக்கு, கிழக்கு வீரர்களின் ஆட்டத்தினைப் பார்த்து அவர்களில் ஆறு வீரர்களை முதற்கட்டமாக தேசிய அணியுடனான பயிற்சிகளுக்காக அழைக்கவிருக்கும் சனத் பாராட்டப்பட வேண்டியவரே!

தொலைக்காட்சிகளில் மட்டும் பார்த்து ரசித்த கிரிக்கெட் நட்சத்திரங்களை தற்போது நேரில் கண்டுகளிக்கும் வாய்ப்பும், அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் சந்தர்ப்பமும் வடகிழக்கு பகுதி வீரர்களுக்கு கிடைத்தமை வரப்பிரசாதமே! இந்த வாய்ப்புக்களை எம்மவர்கள் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு தேசிய மட்டத்தில் பிரகாசிக்க **'கேடயம்'** வாழ்த்துகிறது.



படப்பிடிப்பு : மது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.ரஞ்சன்

# 'மலைகளின் போர்'



மலைகளின் சமர் என வர்ணிக்கப்படும் ஹட்டன் ஹைலண்ஸ் மத்திய கல்லூரிக்கும் ஸ்ரீபாத மத்திய கல்லூரிக்கும் இடையிலான வருடாந்த கடினபந்து கிரிக்கட் போட்டி அண்மையில் ஹற்றன் - டிக்கோயா தரவளை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இந்த ஆட்டம் மழை காரணமாக இரண்டாம் நாள் தேநீர் இடை வேளையுடன் வெற்றி தோல்வி இன்றி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

ஹட்டன் கல்வி வலயத்தில் பாடசாலைகளுக்கிடையில் இடம்பெறும் ஒரேயொரு கடினப்பந்து கிரிக்கட் போட்டி இதுவாகும். இப்போட்டியின் ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணியை ராஜரட்ணம் துசியந்தன் வழிநடத்த, ஸ்ரீபாத மத்திய கல்லூரி அணியை சாமர வர்ணகுல வழிநடாத்தினார். இப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

அதன்படி துடுப்பெடுத்தாட களம் இறங்கிய ஸ்ரீபாத மத்திய கல்லூரி அணியானது தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழுந்து 117 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் தர்சன 36 ஓட்டங்களையும் கிறிஸ்டி 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஹைலண்ஸ் மத்திய கல்லூரி சார்பில் பந்து வீச்சில் வினோதன் ஜோன் 30 ஓட்டங்களுக்கு 7 விக்கட்டுக்களை கைப்பற்றினார். இது இந்த போட்டிகள் அனைத்திலும் சிறந்த பந்து வீச்சாக காணப்படுகின்றது.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 61 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. இதில் பிரியதர்ஸன் 16 ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றார்.

தொடர்ந்து இரண்டாம் இன்னிங்ஸை ஆடிய ஸ்ரீபாத மத்திய கல்லூரி அணி 5 விக்கட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களை பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. இதில் செஹான் 67 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார். ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணி சார்பாக துசாந்த் 20 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுக்களை கைப்பற்றினார்.

160 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு தொடர்ந்து இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணி மழைக் காரணமாக ஆட்டம் நிறுத்தப்படும் வரை 3 விக்கட்டுக்களை இழந்து 39 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதில் துசாந்தன் 11 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார் ஸ்ரீபாத மத்திய கல்லூரி சார்பாக ரஜித 14 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுக்களை பெற்றிருந்தார்.


இந்த போட்டியில் ஹைலண்ஸ் கல்லூரி அணியை சேர்ந்த விநோதன் ஜோன் சிறந்த பந்து வீச்சாளராகவும் மொஹமட் பாரிஸ் சிறந்த களத் தடுப்பாளராகவும் தெரிவானதுடன் ஸ்ரீபாத மத்திய கல்லூரியை சேர்ந்த தர்சன சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் போட்டி நாயகனாக செஹான் கன் ஹேவாவும் தெரிவாகினர்.

இதுவரை நடைபெற்றுள்ள 14 போட்டிகளில் ஹைலண்ஸ் மத்திய கல்லூரி அணி 2005ஆம் ஆண்டு போட்டியில் வெற்றி பெற்றதுடன் 2007 ஆம் ஆண்டு ஸ்ரீபாத மத்திய கல்லூரி வெற்றி பெற்றதுடன் ஏனைய 12 போட்டிகளும் சமநிலையில் முடிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




தேசிய வலைப்பந்தாட்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்ட வில்வலிங்கம் சசிகலா. இவர் பொகவந்தலாவை சென்.மேரிஸ் மத்திய கல்லூரியின் பழைய மாணவியாவார். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து தேசிய ரீதியில் சாதிக்க காத்திருக்கும் சசிகலாவிற்கு 'கேடயம்' தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

படம் : சதீஷ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட எறிபந்துப் போட்டிகள்




யாழ். மாவட்டப் பாடசா லைகளின் எறிபந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட ஆண் கள் பிரிவில் சம் பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் மெமோறி யல் ஆங்கிலப் பாடசாலை வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசா லைகளின் எறிபந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசா லைகளின் எறிபந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட தெல்லிப் பளை யூனியன் கல்லூரி அணி வீராங்கனைகள்.



யாழ். மாவட்டப் பாடசா லைகளின் எறிபந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற இளவாளை கன்னியர் மடம் மகா வித்தியாலய அணி வீராங்கனைகள்.




யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீராங்கனைகள்

படங்கள் : பிரியராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற இளவாளை சென்.ஹென்றியரசர் அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற தேவரையாளி இந்துக் கல்லூரி அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 3ம் இடத்தைப் பெற்ற அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 4ம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி வீரர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்கள்.




யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர்கள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட மாதகல் சென்.ஜோசப் அணி வீராங்கனைகள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அணி வீராங்கனைகள்.



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் கால்பந்தாட்ட அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 3ம் இடத்தைப் பெற்ற மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி வீராங்கனைகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகள்

படங்கள் : பிரியராசா



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை




யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 15 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி வீராங்கனைகள்



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அராலி சரஸ்வதி மகா வித்தியாலம்



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 2ம் இடத்தைப் பெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



யாழ். மாவட்டப் பாடசாலைகளின் வலைப்பந்து அணிகளில், 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுடன்...

**வ**ணக்கம் வாசகர்களே!

கடந்த மே மாத இதழ் விற்பனை ரீதியில் எமக்குப் பெற்றுத்தந்த வெற்றியைத் தொடர்ந்து புது உத்வேகத்தோடு ஜுன் மாத இதழும் வெளிவந்திருக்கின்றது. இம்முறை பக்கங்கள் நான்கு அதிகரிக்கப்பட்டதே எமது வளர்ச்சியின் முதற்படி எனவும் வைத்துக் கொள்ளலாம். யாழ். மாவட்டத்தில் பலரிடம் போய்ச்சேர்ந்திருக்கின்றோம். யாழ்ப்பாணத்திற்கு வெளியே இன்னும் பலரிடம் போய்ச்சேர வேண்டும்.

அடுத்தடுத்த படிகளை நிதானமாகக் கடப்பதால் இன்னும் ஆறு மாதங்களில் இலங்கையில் தமிழ் பேசும் சமூகத்தினரிடையே எங்கள் வெளியீட்டைக் கொண்டு சென்று சேர்க்கலாம் என்று நம்புகின்றோம். தற்பொழுது கொழும்பு மற்றும் மலையகத்தின் சில பகுதிகளில் 'கேடயம்' கிடைக்கின்றது. இவை தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு வெளியீட்டை விஸ்தரிக்க வேண்டிய உடனடித்தேவை உள்ளது.

மாணவர்களே கேடயத்தினை அதிகளவில் வாங்கிப்படிப்பதால், சஞ்சிகையின் விலையினைக் குறைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அது உடனடியாக சாத்தியப்படும் எனத்தெரியவில்லை. முற்று முழுதாக பாடசாலைகள் ஆதரவு தரும் பட்சத்தில் பிரதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். அதன் மூலம் குறைந்த பட்சம் 30 ரூபாவாக சஞ்சிகையை பெற்றுக்கொள்ள வழியமைக்கலாம். மாணவர்கள் பயன்பெறக்கூடிய வகையில் விளையாட்டுடன் தொடர்புடைய பொது அறிவு விடயங்கள், மருத்துவ ஆலோசனைகள் என்பனவும் சஞ்சிகையில் வழங்கப்படுகின்றன.

எந்தவொரு இலாப நோக்கமும் கருதாமல், விளம்பரங்கள் எதனையும் நம்பாமல் விற்பனை மூலம் பெற்றுக்கொள்ளும் நிதியிலிருந்தே கேடயத்தின் அடுத்தடுத்த வெளியீடுகள் அச்சடிக்கப்படுகின்றன. விளையாட்டில் சாதிக்கும் மாணவர்களின் திறமைகளை ஏனைய மாணவர்களும் அறிய வேண்டும். விளையாட்டின் மூலம் அறிவார்ந்த இளம் சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கமே எங்களிடம் மேலோங்குகின்றது.

'விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் பிள்ளைகளின் படிப்பு தடைப்படுகின்றது' என பெற்றோரும் ஆசிரியர்களில் பலரும் நினைப்பதுண்டு. கற்றுயர்ந்த சமூகமே அவ்வாறான மாயையை ஏற்படுத்தி வைத்திருக்கும் போது, பாமர மக்களிடம் இவ்விடயங்களை எவ்விதம் கொண்டு போய்ச் சேர்ப்பது?. "விளையாட்டுக்களில் ஈடுபடும் பிள்ளைகளே படிப்பிலும் அதிகள வில் சாதிக்கிறார்கள்" என்ற கருத்தை, 'யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியர்களாக கடமையாற்றுபவர்களில் அநேகர் தமது பாடசாலைக்காலங்களில் விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டவர்களே!' என்ற உதாரணத்துடன் விளக்கினார் யாழ்.வலய உடற்கல்விப்பணிப்பாளர் திரு.சண்.தயாளன் அவர்கள்.

'சஞ்சிகையை பாடசாலையில் விற்பதால் மாணவர்களின் படிப்பு குழம்பும்' என்ற கண்டுபிடிப்பை வலிகாம வலய பாடசாலை அதிபர் ஒருவர் எங்களுக்கு தெரிவித்தார். தங்களுக்கு விருப்பமில்லை என்பதற்காக 'பிள்ளைகள் வாங்காது' என ஒரே வார்த்தையில் திருப்பியனுப்பிய அதிபர்களும் சிலர் உள்ளனர். 'கேடயம்' சஞ்சிகை, இலங்கையிலிருந்து தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள் எல்லாவற்றிலும் இருந்து முற்றிலும் மாறுபட்டது என்பதை அனைவரும் அறிவர். தவிர, விளையாட்டோடு இணைந்தது என்பதால் இது மாணவர்களைக் கவரும் என்பதும் திண்ணம். பாடசாலைகளில், ஒருமுறை சந்தர்ப்பம் தாருங்கள். மாணவர்கள் வரவேற்கவில்லை என்றால் நாங்களாகவே ஒதுங்கிவிடுகின்றோம்.

இவ்வாறான முயற்சிகள் வரவேற்கப்படவேண்டும் என்பதற்காகவேனும், எங்களை ஊக்கப்படுத்துங்கள். இதன் மூலம் ஏதாவது இலாபங்கள் கிடைக்குமாயின் அவற்றையும் கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதற்காகவே உபயோகிப்போம் என்பதையும் உறுதிபடக்கூறி நிற்கின்றோம். இன்றும் எமக்கு ஆதரவாக நின்று எம்மை ஊக்குவிக்கும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த அதிகாரிகளுக்கு என்றென்றும் நன்றிகள்.

**ஆசிரியர்**

---

## பரிசுப்போட்டி 04

**கேள்வி : சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியொன்றில் அதிகூடிய தனிநபர் ஓட்டம் யாரால் பெறப்பட்டது?**

விடை : ..........................................

பெயர் : ..........................................

தொ.பேசி இல : ..........................................

பாடசாலை /

கம்பனி : ..........................................

முகவரி : ..........................................

..........................................

ஒப்பம் : ..........................................

இங்கு வெட்டப்படும் கூப்பன்களுடன் வரும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
விடைகள் வந்து சேர வேண்டிய இறுதித் திகதி 30.06.2013.

சரியான விடைகளை எழுதியனுப்பும் மூன்று அதிஷ்டசாலி வாசகர்களுக்கு தலா ஒவ்வொரு துடுப்பு மட்டை (Bat) பரிசாக வழங்கப்படும்.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி :
**சாந்தினி பதிப்பகம், வட்டுவினி ஒழுங்கை,**
**இணுவில் மேற்கு, சுன்னாகம்**

பரிசுப்போட்டி 02 இற்கான சரியான விடை :
**மும்பை இண்டியன்ஸ்.**

வெற்றி பெற்ற அதிஷ்டசாலி வாசகர்கள்

01. சு.நிசாந்தன் - ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
02. வி.நிரோஷ் - யாழ்.சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி
03. க.யமுனா - கொக்குவில் இந்துக் கல்லூரி


**வெற்றிக் கேடயம்** மாத இதழ்

சாந்தினி பதிப்பக வெளியீடு
வட்டுவினி ஒழுங்கை,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.
தொ.பேசி : (94) 21 4909629
மொபைல் : (94) 771777434
மின்னஞ்சல் : vsheron@gmail.com

| | |
|---|---|
| நிர்வாக இயக்குனர் | : திரு.இ.வை.கனகநாயகம் |
| ஆசிரியர் | : க.வரோதயன் |
| உதவி ஆசிரியர்கள் | : எஸ்.அனுதினன்<br>க.யசோதரன்<br>எஸ்.சத்தியராஜ் |
| செய்தியாளர்கள் | : மது<br>பிரியராசா<br>ரவிமோகன் (கேகாலை) |
| பக்க வடிவமைப்பு | : க்ரிஷ் வருண்<br>எஸ்.ஏ.யசிக் (அட்டைப்படம்) |
| கணனி தட்டச்சு | : எம்.வாகினி |
| அலுவலக உதவி | : செ.றொஷானி (கொழும்பு)<br>அ.மேனகா (யாழ்ப்பாணம்)<br>KSS.ராஜ் (வவுனியா)<br>எஸ்.சிவசக்தி (ஹற்றன்) |
| சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம்: | ப.தக்சன்<br>செ.காண்டீபன் |

அச்சமைப்பு : ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்



இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு விளம்பரதாரர்களே பொறுப்பு. கட்டுரைக்கான முழு உரிமையும் கட்டுரையாளர்களையே சாரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட கபடி





■ படங்கள் : மதுு

**யா**ழ். மாவட்ட மட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான 15 மற்றும் 19 வயதுப்பிரிவுக்கான கபடிப் போட்டிகளின் இறுதிப்போட்டிகள் கடந்த மாதம் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில், 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனாகியதுடன், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே சென். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, கலட்டி சிறிய புஸ்பம் வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.


15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான போட்டியில் இளவாளை சென்.ஹென்றிஸ் அணி சம்பியனாகியதுடன், இரண்டாம் மூன்றாமிடங்களை முறையே கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவு பெண்களுக்கான போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முதலிடம் பெற்றதுடன், இரண்டாம் இடத்தினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி பெற்றுக்கொண்டது. 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணி முதலிடத்தையும், இரண்டாம் மூன்றாமிடங்களை முறையே சென்.ஹென்றிஸ், வேலாயுதம் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக் கொண்டன.


With best compliments from...!

## KAJAMUGAN HARDWARE

## கஜமுகன் ஹாட்வெயர்




கட்டடப்பொருட்கள், கம்பி வகைகள், சீமேந்து,
P.V.C பைப் வகைகள், பெயின்ற் வகைகள்,
Mecson Mesh நெற் வகைகள்
அனைத்தையும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்.




147, 149 STANLEY ROAD,
JAFFNA

TEL : 021 - 222 2833
FAX : 021 - 222 2368

147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணம்

# ஜொனியன்ஸ் வசம்

**மது, பிரியராசா**

பலத்தபோராட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழகம் கொக்குவில் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 'கே.சி.சி.சி.' வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

கடந்த மாதம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணியும் யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டக்கழக அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பாட்டத்தில் கைகொடுக்காத போதிலும் நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் பொறுமையாகத் துடுப்பெடுத்தாடியதால் 39.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 274 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஜொனியன்ஸ் சார்பாக சி.அகிலன் 5 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் உள்ளடங்களாக 69 ஓட்டங்களையும், ஆர்.சஞ்சயன் 43, ரஜீவன் ரத்தினம் 32, எஸ்.தக்ஷன் 29, எ.அன்புஜன் 28, வி.காண்டிபன் 24, பி.லவேந்திரா 17 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்ததுடன், உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணி சார்பில் பந்து வீசிய ஈ.ஜெயரூபன் 7.4 ஓவர்கள் பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களையும் வி.தேவவிதுரன் 8 ஓவர்கள் பந்து வீசி நான்கு விக்கெட்டுக்களையும் என்.தரணிதரன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

275 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாட களமிறங்கிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் எதிரணிக்கு சளைத்தவர்கள் இல்லையென்பதை நிரூபித்தனர். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் எதிர்பார்த்தளவுக்கு சோபிக்காத போதும் நடுவரிசை ஆட்டக்காரர்களாக களமிறங்கிய அச்சுதன், ஜனார்த்தனன் துடுப்பாட்டத்தில் அதிரடியாக ஓட்டங்களை சேகரித்த போதிலும் எஸ்.அச்சுதனினன் ஆட்டமிழப்பு அணியை தோல்வி நிலைக்கு கொண்டு சென்றது.

பல்கலை அணி, 37.4 ஓவர்களில் அனைத்த விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களை பெற்றது. எஸ்.அச்சுதன் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்ளடங்கலாக 64 ஓட்டங்களையும், என்.ஜனார்த்தனன் 46, எ.ஜெயந்திரன் 34, எஸ்.தசிதரன் 23, எஸ்.சங்கர் 18, வி.தேவவிதுரன் 15, ஆர்.தசரீதன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 30 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஜொனியன்ஸ் விளையாட்டக்கழகத்தின் சார்பில் பந்துவீசிய பி.லவேந்திரா 7.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையும் ஆர்.சஞ்சஜன் 7 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களையும் எ.டக்சன் 7 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களையும் பிரிந்தன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.சஞ்சஜன் போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக சி.அகிலனும் சிறந்த களத்தடுப்பாளராக வி.காண்டிபனும் பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த என்.தேவவிதுரன் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## தரப்படுத்தலிலும் ஜொனியன்ஸ் முதலிடம்

யாழ். சென்ரல் விளையாட்டுக் கழகம் 'ஜோர்ஜ் வெப்ஸ்டர்' கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் நடைபெறும் 20, 30, 40 மற்றும் 50 ஓவர்கள் துடுப்பாட்ட போட்டிகளின் அடிப்படையில் சிறந்த அணிகளை வருடா வருடம் தரப்படுத்தி வருகின்றது. 01.01.2013 இலிருந்து 29.05.2013 வரையும் நடைபெற்ற 68 போட்டிகளின் முடிவுகள் அடிப்படையில், முன்னிலையிலுள்ள கழகங்களின் விபரங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

| அணி விபரங்கள் | புள்ளிகள் |
|---|---|
| ஜொனியன்ஸ் | 73.3 |
| யாழ். பல்கலைக்கழகம் | 69.3 |
| ஜொலிஸ்ரார்ஸ் | 60.5 |
| கொக்குவில் மத்தி. ச.ச. | 42.5 |
| ஓல்ட்கோல்ட்ஸ் | 38.7 |
| மானிப்பாய் பரிஷ் | 28.7 |
| சென்றலைட்ஸ் சொக்ஸ் | 23.9 |
| ஸ்ரான்லி அணி | 23.8 |
| திருநெல்வேலி கிரிக்.கழகம் | 22.4 |
| கிறாஸ் கோப்பர்ஸ் | 22.2 |
| யாழ்.சென்ரல் | 22.2 |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எங்களுக்குச் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் ஊழல், குற்ற மொழிப்பு அமைப்பின் உதவி தேவையில்லை. எங்களுக்கான ஊழல் தடுப்புப் பிரிவை நாங்களே அமைத்துக் கொள்கிறோம். அந்த அமைப்பினைத் தாண்டி எந்தவொரு தவறுகளும் இடம்பெறாது" - இது 2012ம் ஆண்டு இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இறுமாப்புடன் வெளியிட்ட அறிக்கை. தற்போது 2013ம் ஆண்டில் அந்தக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஊழல் தடுப்புப் பிரிவின் திறமை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயற்திறனும் கேள்விக்குள்ளாக்கப் பட்டுள்ளது.

ஷாந்தகுமாரன் ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீற் சவான் ஆகிய மூன்று ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்களின் கைதுகள், அதனைத் தொடர்ந்து பல்வேறுபட்ட சூதாட்டக்காரர்களின் கைதுகள், சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைமை நிர்வாகி குருநாத் மெய்யப்பனின் கைது ஆகியன இந்தியக் கிரிக்கெட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியக் கிரிக்கெட்டில் நடைபெறும் இந்தக் குழப்பங்களை ஆராய முன்பு, இவை தொடர்பான ஆரம்ப நிலை விளக்கங்களைப் பெறுதல் அவசியமானது.
கிரிக்கெட்டில் இடம்பெறும் இவ்வகையிலான முறைகேடுகளில் முக்கியமாக 4 வகைகள் உண்டு.

1. போட்டி நிர்ணயம் (Match fixing) : போட்டியொன்றின் முடிவை மாற்றுதலாகும். அதாவது அணியொன்றின் சில வீரர்கள் இணைந்து வேண்டுமென்றே தங்கள் அணி தோல்வியுறுவதை உறுதி செய்வார்கள். அதற்காக வெளியார் அந்த வீரர்களுக்குப் பணத்தினை வழங்குவார்கள்.


2. ஸ்பொட் ஃபிக்சிங் (Spot fixing) : வீரரொருவர் பணத்தினைப் பெற்றுக் கொண்டு, குறித்தவொரு ஓவரில் அல்லது குறித்தவொரு இடத்தில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்துவார். ஓவரில் அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்தல், வேண்டு மென்றே துடுப்பாட்ட வீரர் ஓட்டங்களை ஓவரொன்றில் பெறாது விடுதல் போன்றன இதில் உள்ளடங்குகின்றன.




3. அணி விபரங்களை வெளியிடல், அணிகளில் மாற்றங்களை ஏற்படுத்தல் : அணியின் உள் இரகசியங்களை வெளியிடுதல் ஆகும். போட்டிக்கு முன்னதாகவே விளையாடும் பதினொருவர் விபரங்களை வெளியிடல், பணத்தைப் பெற்றுக் கொண்டு வீரரொருவர் போட்டியில் பங்குபற்றாதுவிடல் போன்றன இதில் அடங்குகின்றன.

4. சூதாட்டம் (Betting) : மேற்குறிப்பிட்ட 3 வகையான குற்றங்களுக்கும் அடிப்படையானதாக அமைகிறது. ஸ்பொட் ஃபிக்சிங்கில் ஈடுபடவோ அல்லது போட்டி நிர்ணயத்தில் ஈடுபடவோ அவ் வீரர்களுக்கு பணத்தினை வழங்குவது சூதாடிகள் ஆவர். அவ்வாறு பணத்தினை வழங்கி அந்த ஓவரிலோ அல்லது போட்டியிலோ என்ன நடைபெறும் என்பதை குறித்த சூதாடி முன்னரே அறிந்து சூதாட்டத்தில் ஈடுபடுவார். அதன் மூலம் அவர் அதிக பணத்தைப்

# சூது கவ்வியது : வெளி




**-கோபிகிருஷ்ணா கனகலிங்கம்**


பெற்றுக் கொள்வார்.

போட்டி நிர்ணயமொன்றில் ஈடுபட அணியொன்றிலுள்ள சில வீரர்களின் உதவி தேவைப்படும். தனித்த ஒருவரால் போட்டியின் முடிவைத் தனது அணிக்கெதிராக மாற்றுவது கடினமானது.ஆனால் ஸ்பொட் ஃபிக்சிங்கில் தனித்த வீரரொருவர் இலகுவாக ஈடுபடலாம். பணத்தைப் பெற்றுக் கொண்டு குறித்த ஓவரோ அல்லது குறித்த பகுதியிலோ அவர் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தினால் போதுமானது. இந்த மோசமான பெறுபேறு சிலவேளைகளில் போட்டியின் முடிவில் தாக்கத்தினையே செலுத்தாது.

பல மில்லியன்கள், பில்லியன்கள் புரளும் இந்தியன் பிறீமியர் லீக் தொடர் தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே சந்தேகங்கள் எழுப்பப் பட்டிருந்தன. ஆனால் பணபலம் மிக்க இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் கீழ் இயங்கிய இந்தியன் பிறீமியர் லீக் இரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்துகின்ற, கிரிக்கெட் வீரர்களுக்குரிய அதி களவிலான ஊதியத்தை வழங்கும் ஒன்றாக இருந்த நிலையில், சந்தேகங்களை மறந்து, அத்தொடர் பிரபலமாகுவதை வீரர்களும், இரசிகர்களும் விரும்பியிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்க்கையில் அடிப்படையான அம்சமாக, ஒரு விடயம் தவறென்று, பிழையென்று, தோல்வியைத் தரத்தக்கது என்பது உறுதிப்படுத்தப்படும் வரை, அவ்விடயம் சரியானது என நம்பிக் கொள்வது எமக்கு உதவிக் கொள்ளும். இந்தியன் பிறீமியர் லீக்கும் அவ்வாறு தான். இந்தத் தொடரில் தவறுகள் இருக்கலாம் என உள்மனது சொல்லிக் கொண்டாலும், அந்தத் தவறுகள் வெளிப்படுத்தப்படும் வரை அவை எவையாக இருக்கலாம் என எங்களை நாங்களே குழப்பிக் கொள்ள முடியாது.

2008ம் ஆண்டு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வாங்குவதற்காக என்.ஸ்ரீனிவாசன் கிரிக்கெட் சபை யாப்பையே மாற்றியமை, 2010ம் ஆண்டு ஐ.பி.எல் ஏலத்தின் போது அன்ட்ரூ பிளின்டொப் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடுவதை உறுதிசெய்வதற்காக அப்போதைய ஐ.பி.எல் தலைவர் லலித் மோடியும், சென்னை சுப்பர் கிங்ஸின் உரிமையாளருமான என்.ஸ்ரீனிவாசனும் செய்த மோசடிகள், அதன் பின்னர் அவ்வப்போது எழும் சில முறைகேடுகள் ஆகியன இந்தியன் பிறீமியர் லீக்கை வெறுக்கச் செய்யும் சக்தியைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், இவ்வாண்டு ஸ்ரீசாந்த், அஜித் சண்டிலா, அங்கீற் சவான்

# றியது ஐ.பி.எல். சாயம்

ஆகிய வீரர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு தங்களது ஓவர்களில் வேண்டுமென்றே அதிக ஓட்டங்களை விட்டுக் கொடுத்தார்கள் என்ற தகவலும், அதனைத் தொடர்ந்து ஏராளமான சூதாட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவலும், அதன் பின்னர் முக்கியமான தகவலான குருநாத் மெய்யப்பன் கைது செய்யப்பட்டார் என்கிற தகவலும் இந்தியன் பிறீமியர் லீக் மீதான நம்பிக்கைகளை அசைத்திருக்கின்றன.

கைது செய்யப்பட்டிருக்கிற வீரர்களில் ஸ்ரீசாந்த் இந்தியாவின் டெஸ்ற் வீரர் என்பதோடு, ஏனைய இருவரும் உள்ளூர் வீரர்களாகக் காணப்படுகின்றனர். இதிலும், ஸ்ரீசாந்த் இந்திய அணியில் இடம்பெற்று நீண்ட காலம் என்ற நிலை காணப்பட்டது. ஆனால் குருநாத் மெய்யப்பனின் கைது இந்தியன் பிறீமியர் லீக்கை அசைத்துப் போட்டது.

கைது செய்யப்பட்ட குருநாத் மெய்யப்பனொன்றும் சாதாரணமானவர் கிடையாது. இந்தியாவின் பழைமையான திரைப்படத் தயாரிப்பு நிறுவனமான ஏ.வி.எம் நிறுவனத்தின் ஸ்தாபகரான மெய்யப்பச் செட்டியாரின் மகன், அந்நிறுவனத்தின் தற்போதைய முகாமைத்துவப் பணிப்பாளர். அதை விட, சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் உரிமையாளராகவும், அணித்தலைமை நிர்வாகியாகவும் செயற்படுவதாக ஊடகங்களில் அறியப்பட்டவர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சார்பாக ஏலங்களில் கலந்து கொண்டு அணியைத் தெரிவு செய்தவர். இதையெல்லாவற்றையும் விட, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் என்.ஸ்ரீனிவாசனின் மருமகன். என்.ஸ்ரீனிவாசனின் மகளான ரூபாவின் கணவர்.

கிரிக்கெட் வரலாற்றில் இவ்வாறான உயர்நிலை அதிகாரியொருவர் சூதாட்டக் குற்றச்சாட்டுக்களுக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட முதற்தடவையாக இது அமைந்து கொண்ட நிலையில், இது இந்தியக் கிரிக்கெட்டில் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த உலகக் கிரிக்கெட்டிலும் ஆதிக்கத்தைச் செலுத்தியது. தற்போது, தலைவர் பதவிலிருந்து ஸ்ரீனிவாசன் தற்காலிகமாக ஒதுங்கியிருக்கிறார். ஆனால், செயலாளரும், பொருளாளரும் பதவியிலிருந்து விலகியிருக்கின்றனர். என்.ஸ்ரீனிவாசன் பதவி விலகுவாரானால் உலகக் கிரிக்கெட்டில் அதிகம் சக்தி வாய்ந்த ஒருவரின் பதவிக்காலம் முடிவடைந்த வரலாறாக மாறும்.

பெருமளவிலான பணம், பொலிவூட் கவர்ச்சிகள், போட்டிகளின் பின்னரான களியாட்ட நிகழ்வுகள், அனுசரனையாளர்கள் என்ற பெயரில் வீரர்களை இந்தச் சூதாட்டக்காரர்களும் இலகுவாக அணுகக்கூடிய தன்மை ஆகியன இந்தியன் பிறீமியர் லீக் தொடரை சூதாட்டங்களுக்கும், தவறுகளுக்கும் ஏற்ற இடமாக மாற்றுகின்றன.

கிரிக்கெட்டை நேசிக்கின்ற, தனது கிரிக்கெட் மீது நம்பிக்கை கொண்ட வீரர்கள் இவ்வாறான தவறுகளில் ஈடுபடாமல் செல்கின்ற அதேவேளை, பணத்திற்கு ஆசைப்படுகின்ற, தவறு செய்ய அஞ்சாத வீரர்கள் இவ்வாறான தவறுகளில் ஈடுபட்டுக் கொண் டிருக்கத் தான் போகிறார்கள். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஏராளமான ஆண்டுகளுக்கு முன்னர் தீர்க்கதரிசனமாக எழுதிச்சென்றது இன்றும் உண்மையாக ஒலிக்கிறது.

"திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது...."







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLUG 2013

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான ஒலிம்பிக்ஸ்





**அனுதினன் சுதந்திரநாதன்**

ஒவ்வொரு நாட்டுக்குமே ஒலிம்பிக்ஸ் என்கிற சர்வதேச போட்டியில் பங்குபெற்றி, ஒரு பதக்கத்தையாவது பெற்றுவிட வேண்டும் என்கிற விருப்பம் நிச்சயமாகவே இருக்கும். அதுபோலத்தான், இலங்கை பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் மூன்று வருடங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் பல்கலைக்கழக ஒலிம்பிக்ஸ் போட்டிகள் என்று வர்ணிக்கப்படும் "SLUG" போட்டிகளிலும் பங்குபற்றி, ஒருமுறையாவது சாம்பியன் பட்டத்தை வெற்றிபெற்றுவிட வேண்டும் என்பதே இலங்கையில் உள்ள சகல பல்கலைக்கழகங்களினதும் கனவு. ஆனால், அந்தகனவு நிறைவேறுவது சாதாரண விடயமல்ல.

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஒலிம்பிக்ஸ் என்று வர்ணிக்கப்படும் இந்த "SLUG" (Sri Laknan University Games) போட்டிகள் 1980ம் ஆண்டு முதல் இடம்பெற்று வருகிறது. இந்த போட்டிகள் அன்றைய பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் கற்கைநெறிகளின் பேராசிரியராக இருந்த மதிப்புக்குரிய லெஸ்லி ஹன்துனுகே அவரின் வழிகாட்டலில் ஆரம்பித்துவைக்கபட்டிருந்தது. இவ்வாறு ஆரம்பித்து வைக்கபட்ட முதலாவது SLUG போட்டிகளிலேயே பேராதனை பல்கலைக்கழகம் சம்பியன் பட்டத்தை வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக மூன்று வருட இடைவெளியில் போட்டிகள் இடம்பெற்று வந்தபோதிலும் 1989ம் ஆண்டு நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக போட்டிகள் இடம்பெற்று இருக்கவில்லை. அதனை தவிர்த்து அனைத்து வருடங்களிலும் இந்த போட்டிகள் இடம்பெற்றே வந்திருக்கிறது. அந்தவகையில் இந்த வருடம் 11வது SLUG போட்டிகள் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் பூரண ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.

இதுவரை இடம்பெற்ற 10 SLUG போட்டிகளில் 7 தடவைகள் கொழும்பு பல்கலைக்கழகம் சாம்பியன் பட்டத்தை வெற்றி கொண்டுள்ளதுடன், பெரதெனியா பல்கலைக் கழகம் 3 தடவைகள் சாம் பியன் பட்டம் வென்றுள் ளது. மொத்தமாக நாடு முழுவதிலுமிருந்து பங்கு கொள்ளும் 13 பல்கலைக் கழகங்களில் இந்த இரண் டு பல்கலைக் கழகங்களும் தான் இதுவரைகாலமும் ஆதிக்கம் செலுத்தி வந் திருக்கிறது.

கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், ஹாக்கி போன்ற போட்டிகள் உட்பட தடகள போட்டிகளையும் உள்ளடக்கி, ஆடவர் - மகளிர் பிரிவுகளில் 35 போட்டிகள் இம்முறை இடம்பெற்று இருந்ததுடன், இந்த போட்டிகளின் முடிவில் இம்முறை முதல் முறையாக மொரட்டுவ பல்கலைக்கழகம் சாம்பியன் பட்டத்தையும் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த போட்டிகளின் போது, கிழக்கு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் திறமை வெளிப்பாடுகள் பலரின் கவனத்தை ஈர்க்ககூடியவகையில் அமைந்திருந்தது. குறிப்பாக உதைப்பந்தாட்ட போட்டியில் யாழ். பல்கலைக் கழகமும், குத்து சண்டை போட்டிகளில் கிழக்கு பல்கலைக் கழகமும் முழுமையான ஆதிக்கத்தை செலுத்தியிருந்தன.

அதனடிப்படையில் இம்முறை இடம்பெற்ற முக்கியமான சில போட்டி முடிவுகளின் தொகுப்பு வருமாறு,

**உதைப்பந்தாட்டம் :** மொத்தமாக 14 பல்கலைக்கழகங்கள் 4 குழுக்களாக பிரிக்கப்பட்டு முதல் தகுதிகாண் போட்டிகளில் பங்கு பற்றியிருந்தனர். இதன்போது, வெற்றி பெற்ற மொரட்டுவ, பெரதேனியா, கொழும்பு, யாழ்ப்பாணம், கிழக்கு, தென்கிழக்கு, வயம்ப, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் முதலாவது சுற்று போட்டியில் வெற்றிபெற்று காலிறுதிப்போட்டிகளுக்கு தெரிவாகி யிருந்தனர். இதன் போது, யாழ்பாண பல்கலைக்கழக அணி தான் எதிர்கொண்ட முதலாவது சுற்று போட்டியில் 7 கோல்களை எதிரணிக்கு எதிராக பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

காலிறுதிப் போட்டியில், கொழும்பு பல்கலைக்கழக அணி ஜெவர்த்தனபுர பல்கலைக்கழக அணியை வெற்றி கொண்டும், பெரதெனியா பல்கலைக்கழக அணியை கிழக்கு பல்கலைக்கழக அணி வெற்றிகொண்டும்,



யாழ். பல்கலை உதைபந்தாட்ட அணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொரட்டுவ பல்கலைக்கழக அணி தென்கிழக்கு பல்கலைக்கழக அணியை வெற்றிகொண்டும், யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி வயம்ப பல் கலைக்கழக அணியை வெற்றிகொண்டும் அரையிறுதிப்போட்டிகளுக்கு தகுதிபெற்றிருந் தனர். முதலாவது அரையிறுதிப் போட்டியில் மொரட்டுவ மற்றும் கிழக்கு பல்கலைக்கழக அணிகள் மோதியிருந்தன. முழுநேர ஆட்ட முடிவில் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் பெனால்டி முறையின் மூலமே வெற்றி யாளராக மொரட்டுவ பல்கலைக்கழக அணி தெரிவு செய்யப்பட்டது. மற்றுமொரு அரையிறுதிப் போட் டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி மிக இலகுவான முறையில் கொழும்பு பல்கலைக்கழக அணியை 3-0 என்கிற முறையில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியிருந்தார்கள்.


யாழ். பல்கலை ஹொக்கி அணி

இறுதிப்போட்டியில் மொரட்டுவ பல்கலைக்கழக அணியை சந் தித்த யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி 4-1 என்கிற ரீதியில் அபாரமான முறையில் வெற்றிபெற்று சாம்பியன் ஆகியிருந் தார்கள். அதேதருணத்தில் மூன்றாவது இடத்தை தீர்மானிப்பதற் காக இடம்பெற்ற போட்டியில் கொழும்பு பல்கலைக்கழக அணி கிழக்கு பல்கலைக்கழக அணியை வெற்றிகொண்டு ஆறுதல் 3ம் இடத்தை பெற்றுக்கொண்டார்கள்.

**கிரிக்கெட் :** SLUG போட்டிகளில் கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி சீரற்ற காலநிலை காரணமாக, 39 ஓவர்கள் மட் டுப்படுத்தபட்ட போட்டியாகவே இடம்பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இந்த இறுதிப்போட்டியில் மொரட்டுவ பல்கலைக் கழக அணியும், கொழும்பு பல்கலைக்கழக அணியும் பங்குபற் றியிருந்தன. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மொரட்டுவ பல்கலைக்கழக அணி 39 ஓவர்களில் 238 ஓட்டங் களை பெற்றுக்கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்பு பல்கலைக்கழக அணி 29 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக போட்டி இடைநிறுத்தப்பட்டு, டக்வேர்த் லூயிஸ் முறைக்கு இணையாக இலங்கையில் பயன்படுத்தப்படும் 'பரபோல' முறை மூலமாக மொரட்டுவ அணி வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த கிரிக்கெட் தொடரில், கொழும்பு பல்கலைக்கழக அணி இரண்டாம்இடத்தையும் பெற்றுக்கொண்டது.

**கரப்பந்து :** தீர்மானம் மிக்க கரப்பந்து போட்டிகளின் அரையிறுதி, இறுதி போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவுக-ளில் இடம்பெற்று இருந்தது. ஆடவருக்கான அரையிறுதிப்போட் டியின் மூலமாக இறுதிப்போட்டியில் பங்குபற்ற சப்ரகமுவ, ருகுண பல்கலைக்கழக அணிகள் தெரிவாகியிருந்தன. ஐந்து சுற்றுக்களை கொண்டதாக இடம்பெற்ற கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் நான்கு சுற்றுக்களை வெற்றிகொண்டதன் மூலமாக, ருகுண பல்கலைக்கழக அணி சாம்பியன்பட்டத்தை வெற்றி கொண்டிருந்தது. அதேபோன்று, மூன்றாவது இடத்தை ஜெயவர்த்னபுர பல்கலைக்கழக அணி வெற்றியை பெற்றுக் கொண்டது.

பெண்களுக்கான கரப்பந்து போட்டியில், இறுதிப்போட்டிக்கு ஜெயவர்த்தனபுர மற்றும் களனிய பல்கலைக்கழக அணிகள் தகுதி பெற்றிருந்தன. இந்த போட்டியில், களனிய பல்கலைக் கழக அணி மூன்று சுற்றுக்களையும் வெற்றிகொண்டு சாம் பியன் பட்டத்தை தட்டி சென்றதுடன், மூன்றாவது இடத்துக்கான போட்டியில் மொரட்டுவ பல்கலைக்கழக அணியை கொழும்பு பல்கலைக்கழக அணி வெற்றி கொண்டது.

**சுவட்டு நிகழ்ச்சிகள் :** இறுதிநாளில் ஆடவர் மகளிர் பிரிவில் இடம்பெற்ற 12க்கும் மேற்பட்ட பல்வேறு சுவட்டு நிகழ்ச்சிகளின் முடிவில், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அணி சாம்பியன் அணியாக சுவட்டு நிகழ்ச்சிகளில் அறிவிக்கப்பட்டது. ஒட்டு மொத்த போட்டி களின் புள்ளிகளின் அடிப்படையில் இந்த முடிவு எட்டப்பட்டிருந் தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதி நாள் நிகழ்வாக சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன், இறுதிநாள் முடிவில், மகளிர் மற்றும் ஆடவர் பிரிவிகளின் ஒட்டு மொத்த புள்ளிகளின் படி முன்னிலை பெற்றிருந்த மொரட்டுவ பல்கலைக்கழகம் இம்முறை சாம்பியன் பட்டத்தை வென்றதாக தேர்வுசெய்யபட்டிருந்தது. இந்த பல்கலைக்கழகம் SLUG போட் டிகளில் சாம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதன் முறையாகும்.

கடந்த வருடங்களை விடவும் இந்த வருடம் மிகச்சிறப்பான பெறுபேறுகளை வெளிபடுத்திய யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக் கழகங்கள் ஒட்டுமொத்தமாக அனைத்து போட்டிகளிலும் பங்கு கொள்ளுகின்ற திறனை கொண்டிருக்காததன் காரணமாக, புள் ளிகள் பட்டியலில் முன்னிலை பெற தவறியிருந்தன. அதுபோல ஆடவர் பங்களிப்புக்கு சமனாக மகளிர் பங்களிப்பும் அமைந் திராமையும் புள்ளிகள் பட்டியலில் முன்னிலை பெறமுடியா மைக்கு காரணமாக மாறியிருந்தது. எனினும், எதிர்வரும் காலங் களில் மகளிர் பங்களிப்பு அதிகமாகின்ற போது, தென் மாகாண பல்கலைக்கழகங்களுக்கு சமபலமான சவாலை வழங்கக்கூடிய அணிகளாக இவை மாற்றம் பெறும் என்று எதிர்பார்க்கலாம்.!


## மினி ஒலிம்பிக்ஸ்

### 8 பதங்கங்களை வென்ற யாழ். பல்கலை

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான 11ஆவது மினி ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் யாழ். பல் கலைக்கழகம் ஒரு தங்கம், 3 வெள்ளி, 4 வெண் கலப்பதக்கங்களை வென்றுள்ளது. இத்தடகளப் போட்டிகள் கடந்த மே 12, 13ஆம் திகதிகளில் மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் உயரம் பாய்தலில் ஜெயரூபன் தங்கப்பதக்கத்தினையும், கே.ஜங்கரன் 110, 400 மீற் றர் தடைதாண்டல் போட்டிகளில் வெள்ளிப் பதக் கத்தினையும், வி.நிசாந் தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தினையும், பி.அபிகரன் உயரம் பாய்தலில் வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றனர். பெண் களுக்கான பிரிவில் எஸ்.தாரணி ஈட்டி எறிதலில் வெண்கலப்பதக்கத்தினையும், ரி.அபிராமி தட்டெறி தலில் வெண்கலப்பதக்கத்தினையும், ஆர்.துஸ்யந் தினி 800 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப்பதக்கத் தினையும் வென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ‘நெய்மர்’ பிரகாசிக்குமா இந்த புதிய நட்சத்திரம்?



S.S.கிஷோகர்

நெய்மார்.... உலகின் உதைபந்தாட்ட ரசிகர்கள் மற்றும் அவதானிகளின் வாய்களில் இப்போதெல்லாம் அடிக்கடி உச்சரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பெயர் இது தான். 21 வயதேயாகும் இந்த பிரேஸில் நட்சத்திரம், இந்தளவுக்கு ஊடகங்களின் பேசுபொருளாக ஆகியிருப்பதில் காரணங்கள் ஏராளமாக கொட்டியிருக்கின்றன.

தனது 17வது வயதில் சர்வதேச போட்டிகளை ஆட ஆரம்பித்ததிலிருந்து உலக உதைபந்தாட்ட அவதானிகளின் பார்வை முழுதும் நெய்மார் மீது திரும்ப தொடங்கியது. பிரேஸிலுக்காகவும், பிரேஸிலின் பிராந்திய கழகமான ‘சன்டொஸ்’ அணிக்காகவும் நெய்மார் ஆடிக்கொண்டிருந்த காலப்பகுதிகளில், உதைபந்தாட்ட உலகின் ஜாம்பவான்களான பீலே, ரொமாரியோ, ரொனால்டினோ உட்பட பலராலும் ‘உலகின் தலை சிறந்த வீரர்’ என்று பாராட்டு பெற்றவர் நெய்மார். லாவகமான ஆட்டம், வேகம் தொலைநோக்கு, கோல் போடும் சாமர்த்தியம், ஆட்டத்தில் அழகு போன்ற காரணங்களால் ‘ஒரு நாயகன் உதயமாகிறான்’ என்ற ரீதியில் உதைபந்தாட்டத்தின் அனைத்து தரப்பாலும் பாராட்டு பெற்றவர். உலகின் சிறந்த வீரர் நெய்மாரா? மெஸ்ஸியா? என்று உதைபந்தாட்ட ஜாம்பவான்களான மரடோனா மற்றும் பீலே இடையில் ஒரு கருத்துப் போர் நடந்தது பலருக்கு நினைவிருக்கலாம்.

இந்த நிலையில் கடந்த 10 வருடங்களாக ஆடிக்கொண்டிருந்த ‘சன்டொஸ்’ அணியிலிருந்து, இந்த பருவகால வீரர்கள் பரிவர்த்தனையின் போது ஸ்பெயினின் பார்சிலோனா அணிக்கு ஒப்பந்தமாகியிருக்கிறார் நெய்மார். இந்த பருவகாலத்தில் உலகின் தலைசிறந்த பலர் வீரர்கள் தங்களது கழகங்களிலிருந்து வேறு கழகங்களுக்கு மாற இருக்கின்ற போதும், நெய்மாரின் கழக மாற்றம் அதி முக்கியத்துவம் பெறுகின்றமைக்கான காரணம் யாதெனில், உலக உதைபந்தாட்ட ஜாம்பவான்களால் “எதிர்காலத்தில் உதைபந்தாட்ட வரலாற்றில் பல சாதனைகளை தனக்கென தக்கவைக்கபோகும் வீரர்” என்று புகழாரம் சூட்டப்பட்ட இந்த வீரரின் ஐரோப்பிய பிரவேசம் தான்.

நெய்மாரின் ஐரோப்பிய பிரவேசத்துக்கும், அவரின் புகழுக்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? காரணம் இல்லாமல் இல்லை. நெய்மாரால் ஐரோப்பாவில் பிரகாசிக்க முடியாது என்று அவர் மீது குற்றச்சாட்டினை முன்வைப்போரது முக்கிய குற்றச்சாட்டு யாதெனில், நெய்மார் இதுவரை ஆடிவந்த ‘பிரேஸில் பிராந்திய போட்டிகளை’ விட ஐரோப்பாவின் பிராந்திய போட்டிகள் கடினமானவை, ஐரோப்பாவின் பின்கள வீரர்களோடு (Defenders) போட்டியிட்டு கோல் அடிக்க நெய்மாரால் முடியாது.

ஆனால் என்னை பொறுத்தவரை இந்த இறுக்கமான, கடினமான ஐரோப்பிய சவால்களை எதிர்கொள்வதற்குரிய தகமைகளை நெய்மார் கொண்டிருக்கிறார் என்பது தான். அது போக ஐரோப்பிய பிராந்திய ‘பின்கள வீரர்களோடு’ ஒப்பிட்டு பார்க்க முடியாவிட்டாலும் கூட பிரேஸில் பிராந்திய போட்டிகளில் ஆடும் “Fluminesse Football Club, Sao Paulo FC, Flamengo, SC Corinthians Paulista” ஆகிய கழகங்களில் சவாலான ‘பின்கள வீரர்கள்’ இருக்கிறார்கள். அவர்களையும் நெய்மார் எதிர்கொண்டுதான் இருக்கிறார். அத்தோடு ஐரோப்பாவில் மிகப் பெரும் சாதனைகளை செய்த பிரேஸிலின் ரிவால்டோ, ரொமாரியோ, ரொனால்டினொ ஆகியோரும் ஆரம்பத்தில் பிரேஸிலின் பிராந்திய போட்டிகளில் ஆடியவர்கள் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு பிரேஸில் தேசிய அணிக்காக நெய்மார் ஆடிய ஆட்டங்களில், நெய்மாரால் பிரேஸில் பிராந்தியத்தில் மட்டுமல்ல சர்வதேச தரத்திலும் சிறப்பாக ஆட முடியும் என்று புரிந்துகொள்ள முடியும்.

அது போக நெய்மாரால் பார்சிலோனாவில் சோபிக்க முடியாது, பார்சிலோனாவின் கடந்த கால முன்கள வீரர்களது ஒப்பந்தங்களெல்லாம் தோல்வியிலேயே முடிவடைந்திருக்கிறது என்று இப்ரஹிமோவிச், டேவிட் வியா ஆகியோரது ஒப்பந்தங்களை சுட்டிக்காட்டி சிலர் செய்திகள் வெளியிட்டாலும், பார்சிலோனாவின் பிரேஸில் வீரர்களது ஒப்பந்தங்கள் அனைத்தும் கடந்த காலங்களில் வெற்றிகரமாகவே இருந்திருக்கின்றது என்பதற்கு ரிவால்டோ, ரொமாரியோ, ரொனால்டினோ ஆகியோரே சாட்சி.

நெய்மாரின் அந்த தகுதி காரணமாகவே உலகின் தலை சிறந்த கழகங்களான பார்சிலோனா, ரியல் மட்ரிட், பயர்ன் முனீச், செல்சியா ஆகிய கழகங்கள் நெய்மாரின் பின்னால் வரிசை கட்டி நின்றன. ஒரு வீரரின் ஆளுமை – திறமை குறித்த உலகின் முன்னணி கழகங்கள் நான்கின் மதிப்பீடுகளும் தவறாகி போக வாய்ப்பில்லை அல்லவா?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆக ஐரோப்பாவில் ஆடுவதற்குரிய அனைத்து தகமைகளையும் நெய்மார் கொண்டிருக்கிறார் என்பது 100 சதவீதம் உறுதி. ஆனால் இப்போதுள்ள மில்லியன் டொலர் கேள்வி என்னவென்றால் பார்சிலோனாவின் ஆட்டமுறையுடன் நெய்மாரால் ஒத்துப்போக முடியுமா? அல்லது நெய்மாருக்கு ஏற்றால் போல் பார்சிலோனா தனது ஆட்ட முறையை மாற்றியமைக்குமா என்பது தான்.

என்னைக்கேட்டால் இந்த இரண்டாம் கேள்விக்கான பதில் இல்லை என்பதாகத்தான் இருக்கும். எந்த ஒரு வீரருக்காகவும் தனக்கு வெற்றிகளையும் புகழையும் தேடித்தந்த டிக்கி-டகா (Tiki-Taka) ஆட்டமுறையை மாற்றிக்கொள்ள பார்சிலோனா சம்மதிக்காது. இங்குதான் நெய்மாரின் ஆட்டமுறை முரண்படுகிறது. நெய்மாரின் ஆட்டமுறையான டிபிளிங் (Dribbling ) + வேகமும், பந்தை டிரிபிள் செய்யாமல் பாஸ் செய்து ஆடும் முறையான பார்சினோனாவின் டிக்கி-டகாவும் (Tiki-Taka) ஒன்றுக்கு ஒன்று முரணானவை.

இப்படியிருக்க நெய்மாரின் இந்த பார்சிலோனா பிரவேசமானது நெய்மாரின் திறமைக்கும் சரி, பார்சிலோனாவின் வெற்றிகளுக்கும் சரி எப்படி கைகொடுக்க போகிறது என்பதே விமர்சகர்களின் கேள்வியாக இருக்கின்றது. இங்கு தான் பார்சிலோனவின் 4-3-3 Formation கவனிக்கப்பட வேண்டியதொன்றாகிறது. இந்த Formation கீழ் இடது பக்க விங்கர்கள் (Lest Wingers) 'ட்ரிபிள்' செய்து ஆட அனுமதிக்கப்படுகிறார்கள்.

பார்சிலோனா டிக்கி-டகா முறையில் ஆடிவந்தாலும், 'டிட்டோ விலனோவா' பார்சிலோனாவின் முகாமையாளர் பதவியை ஏற்றதன் பின்னர் டிக்கி-டகா முறைமையில் சிறிது தளர்த்தல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது மத்திய கள வரிசை வீரர்கள் டிக்கி-டகா முறைமையில் பந்துகளை பரிமாறிக்கொள்ள, முன் வரிசை வீரர்கள் பந்த 'ட்ரிபிள்' செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. கடந்த பருவகாலத்தின் லீக் போட்டிகளின் போது பார்சிலோனாவின் இடது பக்க "Winger" ஆக செயற்பட்ட "கிறிஸ்டியன் டெயோவின்" ஆட்டத்தை பார்த்திருந்தால் இது புரிந்திருக்கும். கிறிஸ்டியன் டெயோவின் இடத்துக்கு தான் நெய்மார் பிரதியீடு செய்யப்பட போகிறார். ஆக நெய்மார் தனது பாணியிலான ஆட்டத்தை தொடர்வதில் எந்த தடங்கல்களும் இருக்கப் போவது இல்லை.

ஆனாலும் "சன்டொசில்" ஆடும் போது நெய்மார் மேற்கொண்ட பூரணமான Dribbling மற்றும் தனிநபர் ஆதிக்க ஆட்டத்தை அப்படியே அப்பட்டமாக ஆடுவதென்பது பார்சிலோனாவில் நெய்மாருக்கு முடியாது போகும்.



காரணம் உலக தரம்வாய்ந்த வீரர்கள் உள்ள பார்சிலோனாவில், பந்தை வீரர்களோடு PASS செய்து ஆடுவது கட்டாயமாக இருக்கும், இரண்டாவது பிரேஸில் பிராந்திய பின்கள வீரர்களோடு ஒப்பிடுகையில் ஸ்பெயின் பிராந்திய கழகங்களின் பின்கள வீரர்கள் சற்று கடுமையானவர்கள். ஆனாலும் ஐரோப்பாவின் ஆட்டமுறைமை நெய்மாருக்கு பழக்கப்பட்ட பின்பு எத்தகைய பின்கள கட்டுக்கோப்பும் நெய்மாரால் உடைக்கப்படலாம்.

நெய்மார் + மெஸ்ஸி என்ற கூட்டணி நிச்சயம் எதிர் அணிகளுக்கு சிம்மசொப்பனமாய் இருக்கும் என்பதில் ஐயமேதும் இல்லை. இந்த இருவருமே உச்சக்கட்டமான திறமைகள் + வேகம் + தொலைநோக்கு என்பவற்றை ஒருங்கே கொண்டவர்கள். ஆனாலும் நெய்மார் பார்சிலோனாவின் ஆட்ட முறையோடு ஒத்துப்போதல் என்பது மிகவும் அவசியம். எது எப்படியிருப்பினும் எம்மாதிரியான ஆட்டமுறையோடும், எம் மாதிரியான அணிகளோடும் ஒத்துப்போய் ஆடுகின்ற திறமையான வீரர் நெய்மார் என்பதில் எந்த மாற்று கருத்தும் கிடையாது.


ஆனாலும் இப்போது வெறும் 21 வயதேயான நெய்மார் பார்சிலொனாவின் அதிநுட்பமான ஆட்ட நுணுக்கத்தை உள்வாங்க சிறிது காலம் எடுக்கலாம். எதிர் அணிகளின் துரதிஷ்டம் உச்சத்தில் இருக்கும் பட்சத்தில் பார்சிலோனாவுக்காக ஓரிரு போட்டிகள் ஆடியவுடனேயே நெய்மாரின் கோல் வேட்டை ஆரம்பமாகலாம். சிலவேளைகளில் அதற்கு ஒரு பருவகாலம் கூட தேவைப்படலாம். பீலேவும் ஏனைய உதைபந்தாட்ட ஜாம்பவான்களும் கூறியதை போல, உலகின் தலைசிறந்த வீரராக பரிமளிப்பதற்கு 21 வயதேயான நெய்மாருக்கு நிச்சயம் அனுபவம் அவசியமாகிறது. அதுவும் ஐரோப்பிய பிரவேசமும், அதன் மூலம் ஐரோப்பிய உதைபந்தாட்ட சூழல் அளிக்கப்போகும் பயிற்சியுமே - விருதுகளின் பார்வையை நெய்மாரை நோக்கி திருப்பும் உந்துசக்திகளாக அமையும். அந்த சூழலானது பார்சிலோனா மூலமாக நெய்மாருக்கு கிடைத்துள்ளது.



எது எவ்வாறு இருப்பினும், பீஃபாவின் விருதுகள் பலவற்றை தன்னகத்தே கொள்ளப்போகும் ஒரு நட்சத்திரம் இப்போது ஐரோப்பாவிற்குள் நுழைந்திருக்கிறது. ரொனால்டினோவும், ரிவால்டோவும் உதைபந்தாட்ட உயரிய விருதான Ballon d'Or விருதினை பெறுவதற்கு தளம் அமைத்து கொடுத்த பார்சிலோனா, நெய்மாருக்கும் அந்த களத்தை அமைத்து கொடுக்கும் என நம்பலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரகாசிக்கத்தவறியவர்கள் சாதிப்பார்களா?




அ.புறூனோ









ஐ.பி.எல். போட்டிகளில் மோசமான பெறுபே-றுகளை வெளிப்படுத்திய இலங்கை அணி வீரர்கள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சம்பியன்ஸ் லீக் தொடரில் சாதிப்பார்களா? என்ற ஐயம் இலங்கை கிரிக்கெட் ரசிகர்களுக்கு இருக்கின்றது. திறமையாக செயற்பட்டாலும் கடந்த உலகக் கிண்ண தொடர் மற்றும் டுவெண்டி 20 தொடர் போலல்லாது அதிஷ்டத்துடன் கிண்ணத்தை வெல்வார்களா என்ற பயமும் கூடவே பற்றிக் கொண்டுள்ளது.

இம்முறை ஐ.பி.எல். போட்டிகளுக்கு இலங்கையில் இருந்து 13 வீரர்கள் விலைக்கு வாங்கப்பட்டனர். அதிலும் குறிப்பாக சங்கக்கார, மஹேல, மத்தியூஸ் ஆகியோர் முறையே ஹைதராபாத் சன் ரைசெர்ஸ், டெல்லி டெயர் டெவில்ஸ், பூனே வாரியர்ஸ் இந்தியா ஆகிய அணிகளுக்கு அணிதலைவர்களாகவும் நியமிக்கப்பட்டனர். இவர்களைத்தவிர திசர பெரேரா, முத்தையா முரளிதரன், ஜீவன் மெண்டிஸ், திலகரட்ன டில்ஷான், லசித் மாலிங்க, அஜந்த மெண்டிஸ், சசித்திர சேனா-நாயக்க, குசல் ஜனித் பெரேரா ஆகியோர் பங்குபெற்றியிருந்தனர். நுவான் குலசேகர, அகில தனஜய சென்னை சூப்பர் கிங்க்ஸ் அணிக்காக கொள்முதல் செய்யப்பட்டாலும் தமிழ் நாட்டில் நடந்த அரசியல் தலையீடுகள் காரணமாக இவர்களால் பங்குபெற முடியவில்லை. மேற்கிந்திய தீவுகளுக்கு அடுத்தபடியாக அதிக வீரர்கள் இலங்கையிலிருந்தே பங்குபற்றினர்.


ஆனால், இலங்கை வீரர்களின் பெறுபேறு மெச்சும் படியாக அமையவில்லை. குறிப்பாக திஸார பெரேரா தவிர வேறு எந்த ஒரு வீரரும் சரியான பெறுபேறுகளை தத்தம் அணிகளுக்காக வெளிப்படுத்தவில்லை. இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் வேகமாக ஓட்டங்களை பெறத் தவறியும் விக்கெட்டுகளை வேகமாக இழந்தும் தடுமாறியிருந்தனர்.


மஹேல, 15 போட்டிகளில் பங்குபற்றி 331 ஓட்டங்களை வெறுமனே 22.06 என்ற விகிதத்திலேயே பெற்றிருந்தார். ஜீவன் மெண்டிஸ் 3 போட்டிகளில் 23 ஓட்டங்களை பெற்றார். சகலதுறை வீரராக கணிக்கப்பட்ட இவர் ஒரு விக்கெட்டினை கைப்பற்றினார். மத்தியூஸ் தான் பங்குபற்றிய 11 போட்டிகளில் வெறுமனே 172 ஓட்டங்களையே பெற்றார். இதில் 40 ஓட்டங்களை புனேயின் இறுதிப்போட்டியில் பெற்றார். பந்துவீச்சில் ஐந்து விக்கட்டுகளை மட்டுமே கைப்பற்றினார். புனே அணிக்காக இம்முறை மிக அதிகவிலை கொடுத்து வாங்கப்பட்ட அஜந்தமெண்டிஸ்க்கு மூன்று போட்டிகளில் மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டது. இதில் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார். இவர் போட்டியொன்றின் போது ஒரு ஓவரின் 6 பந்துகளையும் 6 வெவ்வேறு விதமாக வீசிக்காட்டியிருந்தார். இதை தவிர்த்துப் பார்க்கும்போது அஜந்தமெண்டிசும் இம்முறை பிரகாசிக்கவில்லை.

டில்ஷான் ஐந்து போட்டிகளில் பெற்றது 76 ஓட்டங்கள் மட்டுமே. இத்தொடரில் சிக்ஸர் அடிக்காத வீரர்களின் அரிதான பட்டியலில் டில்ஷானின் பெயரும் இடம்பிடித்தது. உலக சம்பியன் முரளிகூட 6 போட்டிகளில் பெற்றிருந்தது வெறுமனே 3 விக்கெட்டுகள்தான். இதற்காக அவர் 177 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார்.

லசித் மாலிங்க இம்முறை ஹர்பஜன், ஜோன்சனுக்கு அடுத்த படியாகவே காணப்பட்டார். அதிலும் ஐ.பி.எல். இன் எல்லா போட்டிகளையும் பார்த்தால் மாலிங்க இறுதிப்போட்டியை தவிர வேறு எந்த போட்டியிலும் சிறப்பாக விளையாடவில்லை. அதிலும் ப்ளே -ஒப் சுற்றின் இறுதிபோட்டியில் ஓட்டங்களை வாரி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மலிங்க, தான் விளையாடிய 17 போட்டிகளில் 2 தடவைகள் 40 மேற்பட்ட ஓட்டங்களையும் வழங்கியிருந்தார். லசித் மலிங்க விளையாடிய 17 போட்டிகளில் மொத்தமாக 20 விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தாலும் 468 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இது இம்முறை மும்பை இந்தியன்ஸ் பந்துவீச்சாளர் ஒருவரால் விட்டுக்கொடுக்கப்பட அதிக ஓட்டங்களாகும்.











குசல் ஜனித் பெரேராவை பொறுத்தவரை இவர் ராஜஸ்தான் அணிக்காக வெறும் 2 போட்டிகளுக்கே பயன்படுத்தப்பட்டார். ஆனால் இவரது துரதிஷ்டம் இரண்டாவது போட்டியில் டக் -அவுட் ஆனதை தொடர்ந்து வாய்ப்பு பறிபோனது. கடந்த முறை ராஜஸ்தான் அணிக்காக விளையாடிய தினேஷ் சந்திமல் இம்முறை டெல்லி அணிக்காக அழைக்கப்படிருந்தும் அந்த வாய்ப்பை நிரா-கரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. கொல்கத்தா அணியைப் பொறுத்தவரை இலங்கையின் சேனாநாயக்க 8 போட்டிகளில் 9 விக்கட்டுக்களை 23.22 என்ற சராசரியில் வீழ்த்தியிருந்தார்.

இலங்கை வீரர்கள் ஓரளவு சிறப்பாக பிரகாசித்த அணி என நாம் கருதக்கூடியது சன் ரைசெர்ஸ் அணியாக இருப்பினும், சங்ககரா 9 போட்டிகளில் விளையாடி பெற்றது 120 ஓட்டங்கள் மட்டுமே! இதில் இவரது சராசரி 13.33 ஆகவும் ஓட்டவிகிதம் 88.23 ஆகவும் காணப்பட்டது. டுவெண்டி 20 போட்டிகளை பொறுத்தவரை இது ஒரு இறுதிநிலை பந்துவீச்சாளரை ஒத்த துடுப்பாட்ட புள்ளி விபரமாகும். ஆனால் திஸார பெரேரா தனது சிறப்பான சகலதுறை பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தார். அவ்வணி சில இறுக்கமான போட்டிகளை வெற்றி பெறுவதற்கு வழியேற்படுத்தியிருந்தார். அவ்வணிக்காக அதிக சிக்ஸர்களை (14) அடித்த வீரராக பெரேரா பதிவானார். பந்து வீச்சிலும் 17 போட்டிகளில் 19 விக்கட்டுகளை கைப்பற்றியிருந்தாலும் சன் ரைசெர்ஸ் அணிப்பந்து வீச்சாளர்களில் அதிக ஓட்டங்களை வழங்கியவரும் பெரேராவே.

இலங்கை வீரர்களின் பெறுபேறுகளை முற்று முழுதாக நோக்கும் போது, அனைவருமே கடந்த ஐ.பி.எல். போட்டிகளில் பிரகாசிக்கத் தவறியிருந்தார்கள். இலங்கை வீரர்கள் தற்சமயம் சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்காக இங்கிலாந்து சென்றுள்ள நிலையில் பயிற்சிப் போட்டியில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தனர். பொறுத்திருந்து பார்க்கலாம், இத்தொடரில் இலங்கை வீரர்களின் ஆட்டங்கள் எவ்வாறு அமையப் போகின்றது என்பதனை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# யாழ்.மாவட்ட மேசைப்பந்தாட்ட முடிவுகள்

■ படங்கள் : மது

யாழ்.மாவட்ட 15, 19 வயதுப்பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் கடந்த மாதம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மேசைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது. இதில், 15 வயது ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி சம்பியனாகி யதுடன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி இரண்டாமிடத்தினையும், தெல்லிப் பளை யூனியன் கல்லூரி அணி மூன்றாமிடத் தினையும் பெற்றுக்கொண்டன.

15 வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பினாகியதுடன், இரண்டாமிடத் தினை சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் பெற்றுக்கொண் டன.

19 வயது ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல் லூரி அணி சம்பியனாகியதுடன், தொடர்ந்து இரண்டாம் மூன்றாமிடங்களை முறையே யாழ் ப்பாணம் இந்து கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிகள் பெற்றுக்கொண் டன. 19 வயது பெண்கள் பிரிவில் தெல்லிப் பளை யூனியன் கல்லூரி அணி சம்பினாகி யதுடன், இரண்டாம், மூன்றாமிடங்களை முறையே சுண்டுக்குளி மகளிர் கல்லூரி அணி, கொக்குவில் இந்து கல்லூரி அணிகள் பெற்றுக்கொண்டன.

இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தின் ஆதரவுடன் யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தினால் யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண் களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் இரண் டாம் இடத்தைப் பெற்ற நல்லூர் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளன அணியைப் படத்தில் காணலாம்.





இணுவில் ஸ்டார் போய்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய அணிக்கு அறுவர் கொண்ட மென்பந்து சுற்றுத்தொடரில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட இணுவில் இந்து விளையாட்டுக் கழக அணி வீரர்களை படத் தில் காணலாம். இப்போட்டிகளுக்கு ‘கேடயம்’ அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத் தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு போட்டிகள் அடங்கிய 'இன்வெஸ்டெக்' டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் 2 : 0 என்ற கணக்கில் பெருவெற்றி பெற்றிருந்த இங்கிலாந்து அணியினர், அதனைத் தொடர்ந்து நடைபெற்ற 'நஸ்ட் வெஸ்ட்' ஒருநாள் தொடரில் 2 : 1 என்ற கணக்கில் நியூசிலாந்திடம் தோல்வியைத் தழுவியிருந்தது. இருவகைத் தொடர்களிலும் விளையாடி வீரர்கள் அநேகமாக ஒருவரே என்ற ரீதியில் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்டம், மற்றும் பந்துவீச்சு தொடர்ந்தும் கேள்விக்குறியாகவே உள்ளது. இந்தப் பெறுபேறுகள், இனி ஜுலை மாதம் இடம்பெறவிருக்கின்ற அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடருக்கு சவாலாக விளங்கலாம்.

லோர்ட்சில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 170 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றதுடன், மிகச்சிறப்பாகப் பந்துவீசிய ஸ்டுவெர்ட் புரோட் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார். லீட்சில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் 248 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இங்கிலாந்து சார்பாக 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஸ்வான் போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் சிறப்பாட்டக்காரராக இங்கிலாந்தின் ரூட் மற்றும் நியூசிலாந்து சார்பாக சிறப்பாகப் பந்துவீசிய திம் சவுதீ ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.




யோ ரூட், இங்கிலாந்துப் பிராந்தியக் கழகமான யோக்சையருக்காக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்குபவர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்தின் 'அடுத்த பீட்டர்சன்' என ஊடகங்களால் வர்ணிக்கப்படும் ரூட் கிடைக்கும் போட்டிகளிலெல்லாம் தனது சகலதுறைப் பெறுபேறுகளை வெளிப்படுத்தி வருகின்றார். 22 வயதாகும் ரூட், இடதுகை துடுப்பாட்ட வீரரும், ஒப்-பிறேக் பந்துவீச்சாளரும் ஆவார்.

# ஆஷஸ் தொடருக்கு தயாரா?



பவானந்தன்
நித்தியானந்தன்

# இங்கிலாந்து

இங்கிலாந்தும் நியூசிலாந்தும் இதுவரை 34 டெஸ்ட் தொடர்களில் விளையாடியுள்ளதுடன் இந்த டெஸ்ட் தொடர் வெற்றியுடன் இங்கிலாந்து 23வது டெஸ்ட் தொடரை நியூசிலாந்துக்கு எதிராக வெற்றிகொண்டுள்ளது.


டெஸ்ட் தொடரைப் போலவே ஒருநாள் தொடரிலும் சொந்த மண்ணில் சாதிப்பார்கள் என எதிர்பார்க்கப்பட்ட இங்கிலாந்து அணியினரால் ஏமாற்றத்தையே ரசிகர்களுக்கு தர முடிந்தது. லோர்ட்ஸில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் 5 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்த இங்கிலாந்து, இரண்டாவது போட்டியில் 86 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. 'வையிட் வோஷ்' ஐ தடுப்பதற்காக கடும்பிரயத்தனத்திற்கு மத்தியில் நொற்றிங்ஹோமில் இடம்பெற்ற மூன்றாவது போட்டியில் இங்கிலாந்து 34 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அடுத்ததாக ஆஷஸ் தொடர் இடம்பெறவிருக்கும் நிலையில் கெவின் பீட்டர்சன் உபாதைகளிலிருந்து குணமடைந்து மீண்டும் பயிற்சிகளுக்கு திரும்பியதாக தனது ருவிட்டரில் தெரிவித்திருந்தார். ஜோ ரூட் மற்றும் பிரைஸ்லோ ஆகியோர் சிறப்பாக விளையாடி வரும் நிலையில் கெவின் பீட்டர்சன் மீண்டும் அணியில் இணைத்துக் கொள்ளப்படுவாரா என்ற கேள்வி நிலவு- கிறது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த இங்கிலாந்து அணித் தலைவர் குக், "கெவின் பீட்டர்சன் விளையாடத் தகுதிபெறும் பட்சத்தில் எங்கள் அணியில் எப்போதும் உள்வாங்கப்படுவார், ஆனால் அவர் இல்லாத காலத்தில் அணியில் இணைக்கப்பட்ட ஜோ ரூட் மற்றும் பீரைல்லோ ஆகியோர் கொடுத்த வாய்ப்புக்களைச் சிறப்பாகப் பயன்படுத்தியிருக்கின்றனர். இவர்களின் சிறப்பான ஆட்டத்தைக் கண்டு எமது பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் மகிழ்ச்சியடைந்துள்ளார்" என்று தெரிவித்தார்.

பீட்டர்சன் மீண்டும் அணிக்குத் திரும்பும் பட்சத்தில் அவர் பிரைஸ்லோவுக்குப் பதிலாக உள்வாங்கப்படலாம், அல்லது தற்போது ஃபோர்மில் இல்லாமல் ஓட்டங்களைப் பெறத்தடுமாறிவரும் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் நிக் கொம்டக்கு பதிலாக ரூட் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறக்கப்பட்டு தற்போதைய ரூட்டின் இடத்திற்கு பீட்டர்சன் உள்வாங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ரூட்டின் முதல்தர கிரிக்கெட் போட்டிகளின் பெறுபேறுகள் உயர்வாகக் காணப்படுகின்றன. இவர் இதுவரை 46 முதல்தரப் போட்டிகளில் விளையாடி 8 சதங்கள் உட்பட 3151 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இதில் அதி கூடிய ஓட்டமாக 236 பெறப்பட்டுள்ளது. பந்துவீச்சிலும் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருக்கின்றார். மேலதிக பந்துவீச்சாளராக அணியில் இணைத்துக் கொள்ளப்படும் இவரது பந்துவீச்சு, தேவைப்படும் தருணங்களில் மிகச்சிறப்பாக இருப்பதாக அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை ஆறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ரூட், கடந்த நியூசிலாந்துடனான போட்டியில் தனது கன்னிச்சதத்தைப் பதிவு செய்தார். நியூசிலாந்துடனான தொடர் முழுவதும் இவரது துடுப்பாட்டம் மிகச்சிறப்பானதாகக் காணப்பட்டது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ‘ரஃபேல் நடால்’

## களிமண் தரையின் அரசன்



அருளானந்தம்
ஜீவதர்ஷன்



உலகின் ஆண்கள் டென்னிஸ் தரவரிசையில் தற்போது நான்காவது இடத்தில் இருக்கும் ரஃபேல் நடால் 1986 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் பிறந்தவர். 20 ஆம் நூறாண்டின் சிறந்த டெனிஸ் வீரர் என அறியப்படும் ரோஜர் பெடரரை தரவரிசையில் வீழ்த்தி 2008 ஆம் ஆண்டு முதல்முறையாக டெனிஸ் தரவரிசையின் முதலிடத்தை ரஃபேல் நடால் கைப்பற்றியிருந்தார். 10 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வெற்றிபெற்றுள்ள நடால் 1000 மாஸ்டர்ஸ் தொடர்களில் சாதனை எண்ணிக்கையான 24 பட்டங்களை வென்றுள்ளார்.

நடைபெறும் நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் (அவுஸ்திரேலியன் ஒப்பன், பிரெஞ் ஓப்பன், விம்பிள்டன், அமெரிக்கன் ஒப்பன்) பட்டம் வென்றிருந்தாலும் 10 கிராண்ட்ஸ்லாம்களில் 7 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை “பிரெஞ் ஒப்பன்” போட்டிகளில் தான் நடால் வென்றுள்ளார். நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளிலும் களிமண் தரையில் போட்டிகள் நடைபெறுவது “பிரெஞ் ஓப்பன் போட்டிகளில்தான் (அவுஸ்திரேலியன் மற்றும் அமெரிக்கன் ஒப்பன் - ஹர்ட் (Hard Court), விம்பிள்டன் - புற்தரை). களிமண் தரையில் நடாலின் ஆட்டம் மிகவும் உத்வேகமாக இருக்கும். ‘களிமண் காளை’ என வர்ணிக்கப்படும் நடாலை களிமண் தரையில் தோற்கடிப்பது எந்தப்பெரிய வீரருக்கும் சாதாரண விடயமன்று.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மட்டுமன்றி 1000 மாஸ்டர்ஸ் தொடரிலும் நடால் வெற்றி பெற்றுள்ள 24 பட்டங்களில் 18 பட்டங்கள் களிமண் தரையில் பெறப்பட்டவை. உலகின் தலை சிறந்த வீரரான ரோஜர் பெடரருடன் தான் விளையாடிய 30 போட்டிகளில் 20 போட்டிகளில் நடால் வெற்றி பெற்றுள்ளார். அவற்றில் 13 வெற்றிகள் களிமண் தரையில் பெற்றவை. 1000 மாஸ்டர் தொடரில் மொனாகோ நாட்டின் மொண்டிகாலோவில் இடம்பெறும் களிமண் தரையிலான போட்டிகளில் இந்த ஆண்டு(2013) இறுதிப் போட்டியில் தற்போதைய முதல்நிலை வீரர் டிஜோக்கோவிச்சுடன் இறுதிப்போட்டியில் தோற்கும் வரை நடால் தொடர்ச்சியாக 8 ஆண்டுகள் பட்டத்தை தொடர்ச்சியாக கைப்பற்றியிருந்தார் (2005 - 2012), அதேபோல இத்தாலியின் ரோம் நகரில் இடம்பெறும் களிமண் தரை ஆட்டத்தில் இறுதி 9 ஆண்டுகளில் 7 தடவைகள் பட்டத்தை கைப்பற்றியிருக்கின்றார்.

தற்போது நடைற்றுக்கொண்டிருக்கும் “பிரெஞ் ஒப்பன்” கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் நடால் வெற்றி பெறும் பட்சத்தில் தனது அதிகபட்ச “பிரெஞ் ஒப்பன்” பட்டம் பெற்ற சாதனையை மேலும் ஒரு பட்டத்தால் அதிகரிக்கச் செய்யமுடியும். ரசிகர்கள், ஊடகங்கள் என பலரதும் எதிர்பார்ப்பு நாடால் மீதுதான் உள்ளது. காரணம் 2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் நடால் தோல்வியடைந்த ஒரே ஆண்டு 2009 மட்டும்தான், நான்காம் சுற்றில் சுவீடன் நாட்டு வீரரான சொடர்லிங்கிடம் எதிர்பாராதவிதமாக நேர் செட்களில் தோல்வியடைந்தமை தான் நடாலின் பிரெஞ் ஒப்பன் தொடர் வெற்றிப்பயணத்தில் ஏற்பட்ட ஒரேயொரு சறுக்கல்.

களிமண் தரையின் அரசன் (King of Clay) தனது பட்டப்பெயரை மீண்டும் உறுதி செய்வாரா என்பதை அடுத்தடுத்த வாரங்களில் நாம் அறிந்துகொள்ள முடியும்.



கராத்தே என்பது, சண்டைக்குரிய அல்லது தற்காப்புக்கான ஒரு கலையாகும். இது ஜப்பானியத் தீவுக் கூட்டங்களில் ஒன்றான ரியூக்யுத் தீவுக்கு உரிய சண்டை முறைகளும், சீனாவின் கென்போ என்னும் சண்டை முறையும் கலந்து உருவானது. முதன்மையாக இது ஒரு தாக்குதல் கலையாகும். குத்துதல், உதைத்தல், முழங்கால் மற்றும் முழங்கைத் தாக்குதல்கள், திறந்த கை உத்திகள் என்பன இக் கலையில் பயன்படுகின்றன. இறுகப் பிடித்தல், பூட்டுப் போடுதல், கட்டுப்படுத்துதல், எறிதல், முக்கியமான இடங்களில் தாக்குதல் என்பனவும் சில கராத்தேப் பாணிகளில் பயிற்றுவிக்கப்படுகின்றன.

‘ச்சின்’ என்னும் வகுப்பைச் சேர்ந்தோரிடையே இது தோன்றிய இது ”டி” ("ti") அல்லது ”டெ” ("te") என்னும் பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. 1372ல், சுசான் மன்னர் சாட்டோவினால், மிங் வம்சத்துச் சீனாவுடன் வணிகத் தொடர்புகள் உருவாக்கப்பட்டபோது, சீனாவிலிருந்து வந்தவர்கள் மூலம் பலவகையான சீனத்துச் சண்டைக் கலைகள் ரியூக்யுத் தீவுகளுக்கு அறிமுகமானது. சிறப்பாக இவை சீனாவின் ஃபுஜியன் மாகாணத்திலிருந்தே வந்தன. 1392 ஆம் ஆண்டில், 36 சீனக் குடும்பங்கள், பண்பாட்டுப் பரிமாற்றம், சீனச் சண்டைக் கலை பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்ளல் போன்ற காரணங்களுக்காக ஒக்கினாவாவுக்கு வந்தனர். 1429ல் ஷோகினாவா மன்னர் காலத்தில் ஒக்கினாவாவில் ஏற்பட்ட அரசியல் மையப்படுத்தல், 1609 ஆம் ஆண்டில், ஒக்கினாவா ஷிம்சு இனக் குழுவினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் ஆயுதங்கள் தடை செய்யப்பட்டமை போன்ற நிகழ்வுகளும் ஆயுதங்கள் இல்லாத சண்டை முறைகள் வளர்ச்சியடைவதற்குக் காரணமாயின.

■ ஆர்.றொசிஹரிந்
(Black belt 3rd DAN)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

APTECH இன் 1500 கிளைகள் பரந்துள்ள உலகளாவிய 40+ நாடுகள்

Aptech's Global Presence

Aptech COMPUTER EDUCATION Unleash your potential



- 6.5 Million Students
- 40 Countries
- 26 Years of Expertise
- ISO Certified

Kids

Kids Program
International Curriculum
Cambridge University Press Materials

வயதெல்லை
4 தொடக்கம் 12
சிறுவர்களுக்கான தகவல் தொழில்நுட்ப ஆங்கிலபயிற்சி வகுப்புக்கள்

வார நாள் மாலை நேர வகுப்புக்கள்,
வார இறுதி நாள் வகுப்புக்கள்
மாணவாகளின் வசதிக்கேற்ப
நேர அட்டவணை ஒழுங்கு செய்து தரப்படும்

உலகின் நம்பர் 1 நிறுவனத்தின்
INTERNATIONAL DIPLOMA



FREE

10 புத்தகங்கள் 4 வீடியோ CD கள் இலவசமாக வழங்கப்படும்

BSc. பட்டப்படிப்பின் 2ஆம் வருடத்தை நேரடியாகத் தொடர முடியும்

Modules
- C Language
- HTML
- DHTML
- JavaScript
- Dreamweaver
- SQL
- XML
- Java
- Advanced Java
- C#
- Cloud Computing
- Project

நன்மைகள்
- அனைத்து நாடுகளிலும் தொழில்வாய்ப்பை பெறக்கூடிய சான்றிதழ்.
- மேலதிகமாக SQA சான்றிதழைப் பெறமுடியும்.
- புதிய தொழில்நுட்பம்
  - Mobile Technology
  - Web Technology
- உலகநாடுகளில் பட்டப்படிப்பைத் தொடரும்போது பாடவிலக்கு அழிக்கப்படும்
- O/L தகைமையுடன் பட்டப்படிப்பைத் தொடர்வதற்கு இலகுவான வழி

அனைவரிற்கும் 15% SCHOLARSHIP

அழகப்பா பல்கலைக்கழகம்
புதிய கல்வி ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
வகுப்புக்கள், பரீட்சைகள் யாழ் எமது நிறுவனத்தில் நடைபெறும்
இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால்
அங்கீகரிக்கப்பட்ட பட்ட , பட்டமேற்படிப்புக்கள்

A/L மூன்று பாடசித்தியுடன் நீங்களும் இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரியாகலாம்

Distance Education

Under Graduate Programmes ( 3 years )

B.A. – Tamil, English, Histroy, Public Administration
B.Sc. – Psychology, IT, Mathematics, Computer Science
B.Com. – Computer Application, General
B.B.A. – Banking, Corporate Secretaryship, Business Administration
BCA

உங்கள் பதிவுகளிற்கு முந்துங்கள்

Post Graduate Programmes

M.A. – Education, Tamil, English, Histroy, Mass Communication & Journalism, Child Care & Education, Personal Management & Industrial Relations
M.B.A. – International Business, Corporate Secretaryship, Hospital Management, Project Management, Banking & Finance, Investment Management, Tourism Management, Education Management, Human Resource Management
M.Sc. – Mathematics, Computer Science, Information Technology, Physics, Chemistry, Botany-Plant Bio Technology
MCA
M.Com. – General, Finance & Control

நூலகர்களுக்கான விசேட கற்கை நெறிகள்
- Certificate in Library Science
- Bachelor of Library & Information Science
- Master of Library & Information Science

O/L ICT
A/L ICT
GIT

பல முன்னணி மாணவர்களை உருவாக்கிய ஆசிரியர் குழுவால் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.

வகுப்புக்கள் மாணவர்களுக்கு விரும்பிய நேரத்தில் ஒழுங்கு செய்து தரப்படும்.

A/L மூன்று பாட சித்தி இல்லாத
நீங்களும் இலங்கை பல்கலைக்கழக
மானியங்கள் ஆணைக்
குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட
பட்டதாரி ஆகலாம்

தமிழ் மொழி மூலமாக இளநிலை
பட்டப்படிப்புக்கான ஆயத்தப்படிப்பு
(Bachelor's Preparatory Programme (BPP))
உடன் நீங்களும் மூன்று வருடங்களில்
B.A , B.Com பட்டதாரியாகலாம்

ஆங்கிலப்பயிற்சி நெறி
உயர் கல்வி அமைச்சின் சான்றிதழ்
பாடசாலையில் பயிலும் மணவர்கள்,
பரீட்சைக்குத்தோற்றியோர்,உத்தியோகத்தர்கள்
அனைவருக்கும் உகந்தது

Certificate issued by
National Online Distance Education Service of the Ministry of Higher Education

தொடர்புகளுக்கு :
077 933 93 53

Mind Vision
Technology CAMPUS
No. 04, Clock Tower Lane, Jaffna. (பொருளியற்கல்லூரிக்கு அருகாமை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்களும் ஓர் ஊடகவிலாளராக விரும்புகிறீர்களா?

**Journalism**

RESIDENTIAL & DISTANCE LEARNING

# ஊடகவியல்

வதிவிட/ தொலைக்கல்வி பயிற்சிநெறி

யாருக்கு
தொழில்சார் ஊடகவியலாளராக வரவிரும்புவோருக்கு

தகைமை:
க.பொ.த (சா/த)- தமிழ் சித்தி


நோக்கம்
ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழி அறிவு & கணினி பயன்பாடு, ஒலி, ஒளிசார் கணினி மென்பொருள் கையாள் கையுடன் ஊடகவியல்துறை கற்கை நெறி பயிற்சியளித்தல்

கற்கை வெளிப்பாடு:
பயிற்சி முடிவில் பயிலுனர் மும்மொழி ஆற்றல் மற்றும் கணினியை கையாளக்கூடிய ஊடகவியலாளராக இருப்பார்.

மொழி மூலம்:
தமிழ்

காலம்:
3 மாதங்கள்

கட்டணம்:
ரூ. 15,000/-






பாடநெறி மட்டங்கள்

- Foundation
- Certificate
- Diploma

பயிற்சி நெறியாக்கம்:
எம். இந்திரஜித்
முகாமையாளர்
சூரியன் FM செய்திப்பிரிவு

Academy of Media

183, 3வது மாடி, புதுச்செட்டித்தெரு,
கொழும்பு-13.
(Trust Lanka Travels Building)
தொ.பே: 0114 346222, 0114346333
மின்னஞ்சல்: media@edume.lk
www.academyofmedia.org



நீங்களும் ஓர் ஊடகவிலாளராக விரும்புகிறீர்களா?

**Certificate in Journalism**

# ஊடகவியல்

வதிவிட/ தொலைக்கல்வி பயிற்சிநெறி

தொலைக்கல்வி

தொலைக்கல்வி பயிலுனர்களுக்கு தேவைக்கேற்ப மாவட்ட ரீதியாக விசேட செயலமர்வுகள் நடைபெறும்.

விரிவுரையாளர்கள்

C.நடராஜசிவம்
சூரியன் FM ஆலோசகர்

V. பாலேந்திரன்
நாடாளுமன்ற மொழிபெயர்ப்பாளர்

ஹில்மி
அரசாங்க தகவல் திணைக்களம்

இர்:.பான்
தயாரிப்பாளர் வசந்தம் தொலைக்காட்சி

ம. கதிர்
தகவல் தொழில்நுட்பவியலாளர்

யாழில் பதிவுகளுக்கு
0771777434

Academy of Media

யாழ். மாவட்டத்தில் பதிவு செய்யும் மாணவர்களுக்கு, கொழும்பில் நடைபெறும் வகுப்புக்களில் நேரடியாக (இணைய வழி) பங்குபெறும் வாய்ப்பு




கற்கைநெறி:

அலகு I
- ஊடகவியல் -அறிமுகம்
- ஆங்கில & சிங்கள மொழியறிவு
- கணினிப் பயிற்சி
- தகவல் தொழில்நுட்பம் (IT)

அலகு II
- செய்தி
- செய்தி மூலங்கள்
- செய்தி எழுதுதல்
- செய்தி நெறிப்படுத்தல்
- அச்சு & இலத்திரனியல் ஊடகங்களில் செய்தியை பிரசுரித்தல் ஒலி/ஒளிபரப்பல்
- நேர்காணல்

அலகு III
- இலத்திரனியல் ஊடகம்
- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பு
- ஊடகவியல் சட்டம்

திட்ட வேலை
- செய்தி பெறல், எழுதுதல், பிரசுரித்தல், ஒலி/ஒளிபரப்பல்
- நேர்காணல்
- செய்தி வாசிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியா சென்று சம்பளத்துடன் படிப்பதற்கு அரிய வாய்ப்பு

MCIS

## STUDY & EARN IN MALAYSIA


**சிந்தியுங்கள் மாணவர்களே!**
ஒரு மாதம், மலேசியாவைச் சுற்றிப் பார்த்துவிட்டு வர எவ்வளவு செலவாகும்??
அதே பணத்தில் 3 மாத கற்கைநெறியைப் பூர்த்தி செய்துவிட்டு உங்கள் வேலைவாய்ப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

A/L பெறுபேறுகள் உங்கள் உயர்கல்வி கனவை நிறைவேற்றவில்லையா? கவலையை விடுங்கள். உங்கள் எதிர்கால கனவை நாம் நிறைவேற்றுகின்றோம். இன்றே இணையுங்கள். யாழ். மண்ணில் மிகக்குறைந்த கட்டணத்தில் சம்பளத்துடன் படிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் ஒரே நிறுவனம்.

### பயிற்சி நெறிகள்
- Hotel Management
- Creative Multimedia
- Computer System

### நன்மைகள்
- படிக்கும் போதே ரூபா 32,250 சம்பளம்
- உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
- மலேசியா மனிதவள அமைச்சின் சான்றிதழ்
- தங்குமிட வசதி, உணவு சீருடை வழங்கப்படும்

புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
இறுதித் திகதி : 30.06.2013



**Mind Vision**
Technology CAMPUS.
No.04, Clock Tower Lane,
Jaffna, Sri Lanka.

Certification by:
Malaysian Skills Department
(Ministry of Human Resources Malaysia)

பதிவுகளுக்கு அழையுங்கள் :
0771777434

## பொறியியலாளர் ஆவது உங்கள் கனவா?

ENGINEERING @ BANGALORE
Bachelor of Engineering
**Don Bosco**
Institute of Technology

### பொறியியல் பிரிவுகள்
- Computer Science Engineering
- Information Science Engineering
- Electronics & Communication Engineering
- Electrical & Electronics Engineering
- Machanical Engineering

ஜீலை மாதத்திற்கான பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

உலகில் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் பெங்களூர் சென்று 4 வருடங்களில் நீங்களும் பொறியியலாளர் ஆகலாம்.
தங்குமிடம், சாப்பாடு அனைத்தும் இலவசம்.

## நேர்மையான வழியில் அவுஸ்திரேலியா செல்வதற்கு சந்தர்ப்பங்கள் இருக்கும் போது ஏன் குறுக்கு வழியைத் தெரிவு செய்ய வேண்டும்?

அவுஸ்திரேலியாவின் முன்னணி பல்கலைக்கழகத்தில்
ICT, BUSINESS
படிப்பதற்கான வாய்ப்பு. IELTS வகுப்பு
எமது நிறுவனத்தில் ஒழுங்கு செய்து தரப்படும்

### நன்மைகள் :
- படிக்கும் போது கிழமைக்கு 20 மணித்தியாலங்கள் வேலை செய்ய முடியும். (விடுமுறைக்காலங்களில் கூடியளவு மணித்தியாலம் வேலை செய்ய முடியும்.)
- நேர்மையான வழியில் அவுஸ்திரேலியா செல்ல இலகுவான வழி.
- O/L தகமையுடன் முதல் வருடப்படிப்பை யாழில் படித்து 2ஆம் வருடம் அவுஸ்திரேலியா செல்ல முடியும்.

**ATMC** AUSTRALIAN TECHNICAL & MANAGEMENT COLLEGE PTY LTD

**Mind Vision**
Technology CAMPUS

பதிவுகளுக்கு அழையுங்கள் :
0771777434

No.04, Clock Tower Lane,
Jaffna, Sri Lanka.
(பொருளியற்கல்லூரிக்கு அருகில்)
Hot line : 0779339353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org